Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNODDAM

வெளியீடு-57 10 ஜனவரி 2011 விலை: 10.00

## மார்ச்சில் உள்ளூராட்சி தேர்தல்! மகிந்த தனது செல்வாக்கை பரிசோதிக்க உள்ளார்!

# தமிழர்களுக்கும் இது எதிர்காலத்துக்கான சோதனையே!

### புதிய அரசியல் காட்சிகள் முன்வரட்டும் முன்னேறும் நம்பிக்கைகளுக்கான அடித்தளங்கள் வலுப்பெறட்டும்



இலங்கையிலுள்ள 330 உள்ளூராட்சி சபைகளில் 268 சபைகள் தைமாதம் 6ம் திகதியோடு கலைக்கப்பட்டுவிட்டன. இதற்கான தேர்தல் மார்ச் முதல் வாரத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது எஞ்சிய 62 சபைகளும் ஏன் கலைக்கப்படவில்லை என்பதற்கு அரசாங்கம் ஒரு தெளிவான பதிலைத் தந்ததாக இல்லை அரசாங்கம் தான் தோற்றுப் போகக்கூடிய சபைகளுக்குத் தேர்தலை நடத்தாது ஏனைய சபைகளுக்கு மட்டும் தேர்தலை நடத்தி தனது செல்வாக்கு வீழ்ச்சி அடையவில்லை என்பதை நிலைநாட்டுவதற்காக இவ்வாறு செயற்பட்டுள்ளதென ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியமான தலைவர் கரு ஜெயசூரிய குறிப்பிடுகின்றார்.

போரின் வெற்றியினால் ஏற்பட்ட மகிழ்ச்சி, எழுச்சி படிப்படியாக சரத்பொன்சேகாவுக்கான சிறைத்தண்டனை காரணமாகவும் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் வாக்களித்தபடி சம்பள உயர்வை ஏற்படுத்தவில்லை என்பதன் காரணமாகவும் மக்களின் அடிப்படை வாழ்க்கைக்கான உணவுப் பொருட்களின் விலைகள் எல்லாம் 100 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்திருப்பதனால் பரவலாக பொது மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதன் காரணமாகவும் மகிந்த அரசின் செல்வாக்கு பாராளுமன்ற சபைத் தேர்தல் காலத்தோடு ஒப்பிடுகின்ற போது சரிந்து

(தொடர்ச்சி 9 ம் பக்கம் பார்க்க)

## புது வருட நம்பிக்கை

### மானிட வாழ்வை பொங்கி பிரவாகிக்கச் செய்வதும் துன்ப சாகரத்தில் உழலச் செய்வதும் அமானுஷ சக்திகள் அல்ல மானிட சக்திகளே

**பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன், கட்சியின் மூத்த தலைவர் அ.வரதராஜப்பெருமாள் கூட்டாக புதுவருட செய்தி**

புதுவருடம் பிறக்கிறது பிறக்கப் போகிறது என்ற செய்தி மனிதரிடையே உற்சாகத்தையும் தென்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தும்

இன மத குல பேதங்களுக்கு அப்பால் இந்த நம்பிக்கை மனிதர்களை ஒன்றிணைக்கிறது.

இந்த புதுவருட கனவுகளை எதிர் பார்ப்புக்களை நிஜமாக்குவது அரசியல் சமூக தலைமைத்துவங்கள் மற்றும் ஆர்வலர்களின் கடமை

மானிடராக பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா என்பார்கள் இந்த மானிடர்களின் எதிர் பார்ப்பை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்பதும் அத்தகையதே

இலங்கையை பொறுத்தவரை யுத்தத்தால் பாரிய அளவில் பாதிக் கப்பட்ட மக்களின்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

## நடுநிலை பத்திரிகை பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடாது

**டான் ரிவியின் 10வது ஆண்டுவிழாவில் முன்னள் முதல்வர் அ.வரதராஜப்பெருமாள்**



டான் தமிழ் ஒளி தொலைக்காட்சி சேவையின் பத்தாவது வருட நிறைவை கொண்டாடும் விழா 31.12.2010 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு சர்வமத பெரியார்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டு ஆசியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்ததுடன் ஊடகங்கள் தொடர்பான கருத்துக்களையும் முன் வைத்தனர். கலை நிகழ்சிகளும் இடம்பெற்றன. காலை 10 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமான இந்த வைபவத்தில் டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியின் இயக்குனர் எஸ்.குகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத்தொடர்ந்து இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதகுருமார்களின் ஆசியுரைகள் இடம்பெற்றது.

இங்கு தமிழ் ஊடகங்கள் எதிர்காலத்தில் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து கருத்துரை வழங்கிய தோழர் அ. வரதராஜப்பெருமாள் அவர்கள் தமிழ் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் பல்வேறு கஷ்டங்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவர்கள் இந்த நெருக்கடிகள் அவர்களுடைய எழுத்துக்களின் சார்புத் தன்மைக்கு காரணமாக இருந்திருக்கின்றது என்றும்

(தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க)

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குக

**பத்மநாபா ஈபிஆர்எல்எவ் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான**

### இரா. துரைரெட்ணம் ஜனாதிபதிக்கு கடிதம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 70 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வேளாண்மை பாதிப்புக்கு நட்டஈடு வழங்கக் கோரி கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த அடை மழை காரணமாக இம்மாவட்டம் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியது. இவ் வெள்ளம் காரணமாக இயல்பு வாழ்கை ஸ்தம்பிதம் அடைந்தது. குறிப்பாக மீன் பிடி, வியாபாரம், கல்வி நடவடிக்கைகள், போக்குவரத்து, அரச நிர்வாகம், விவசாயச் செய்கை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றில் விவசாயச் செய்கையில் மேட்டு நிலப்பயிரச் செய்கை முற்றாக பாதிப்படைந்த நிலையிலும், வேளாண்மை செய்கையால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. அதிகமாக வாகரை, வாழைச்சேனை, கிரான், வந்தாறுமூலை, ஏறாவூர், கரடியனாறு, ஆயித்தியமலை, மண்டபத்தடி, கல்லடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, பளுகாமம் வெல்லாவெளி, மண்டூர், கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை போன்ற விவசாயக் கண்டம், பிரதேசத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்த பாரிய மழை வீழ்ச்சி காரணமாக வேளாண்மை செய்கை பண்ணப்பட்ட பகுதிகள் அனைத்தும் நீரில் மூழ்கியிருந்தன. இப்பகுதியில் சுமார் 60 ஆயிரம் ஏக்கரிலிருந்து 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகளின் சில அமைப்புக்கள் என்னிடம் முறையிட்டன. நானும் நேரடியாக 4 தினங்கள் சென்று அவதானித்தேன். இப்பாதிப்பு தொடர்பாக இத்திணைக்கள அதிகாரிகள் விவசாயிகளின் நன்மை கருதி விரிவான அறிக்கையை தயாரிக்க ஆரம்பித்துள்ளனர். விவசாயப் பாதிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

## சர்வதேச ஜனநாயக மாணவர் இளைஞர் மாநாடு



மாநாட்டு மண்டபத்தில் பிரதிநிதிகளுடன் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன்

சர்வதேச ஜனநாயக மாணவர் இளைஞர் அமைப்பின் 17வது மாநாடு இம்முறை தென்னாபிரிக்காவில் நடைபெற்றது இம்மாநாட்டில் உலகளாவிய அளவில் இளம் கம்யூனிஸ்ட்டுகள் இடதுசாரி கட்சிகள் தேசிய சமூக விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இலங்கையிலிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இளைஞர் விவகார அமைச்சு மற்றும் ஜேவிபியின் ஏற்பாட்டில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் கலைஞர்கள் இளைஞர்கள் மாணவர்கள் பங்குபற்றினர்.

தென்னாபிரிக்க சுதந்திர போராட்ட தலைவர் நெல்சன் மண்டேலா, கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ ஆகியோர் இளைய தலைமுறையினரின் வாழும் குறியீடுகளாக்கப்பட்டிருந்தனர்.

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)


ஒற்றுமையே பலத்தை தரும் பக்கம்- 04



வடக்கில் ஓயாத வன்முறை பக்கம்- 05



ஆற்றல் மிகு தோழர்களே நண்பர்களே பக்கம்- 07



தோழர்களை நினைவு கூருவோம் பக்கம்- 08



எப்படிப் பாடுவோம் தேசியகீதத்தை பக்கம்- 09




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

Kannoddam



## இந்த நாடு உருப்பட இனியாவது நல்லவை நடக்க வேண்டும்

2011ம் ஆண்டு இலங்கையின் தேசிய இனங்களுக்கிடையிலான நல்லுறவுகளும் யுத்தத்தால் அழிந்து கிடக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மற்றும் துரித பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீட்சி பெற வேண்டும் இலங்கை முழுவதும் ஒரு வளம் மிக்க நாடாக உருவாக வேண்டும் என்பதே நல்லெண்ணம் கொண்ட எல்லோரினதும் விருப்பமாகும்

இந்த நாட்டை கொள்ளையர்களும் ,கொலையாளிகளும் ஊழல் பேர்வழிகளும், ஊரையெல்லாம் சுருட்டி தன் உலையில் போடும் மோசடிப் பெருச்சாளிகளும் தலையெடுத்து ஆட்டம் போடுகின்ற நிலைமை முடிவுக்கு வர வேண்டும்.

பட்டதெல்லாம் போதும் கெட்டதெல்லாம் காணும் இனி ஒரு புதிய விதி செய்வோம் இந்நாட்டின் அனைத்து இன மக்களும் ஒருவரை ஒருவர் மதித்து ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து ஒருவர் நன்மையை மற்றவரோடு பகிர்ந்து ஒருவரது துன்பத்தை மற்றவரும் தானும் பரிமாறிக்கொண்டு அதில் பங்கெடுத்து சகோதரர்களாக வாழும் நிலைமையை இந்த நாடு அடைய வேண்டும்.

எமக்கு அண்மையிலுள்ள இந்திய நாடு பல பத்துக்கணக்கான மதவழிபாடுகளையும், பல நூற்றுக்கணக்கான மொழிகளையும் பல ஆயிரக்கணக்கான கலாச்சாரங்களையும் கொண்டிருக்கும் ஒரு நாடு. இந்திய நாட்டில் ஒவ்வொருவரும் தமது மொழியோடும் தமது மதத்தோடும் தமது கலாச்சாரத்தோடும் பிரதேசத்தோடும், இணைத்துக்கொண்டு வெவ்வேறு அளவில் உள்ளமைந்த சமூகங்கள் ஆக வாழுகின்ற போதிலும் இந்தியா என்று வந்தவுடன் தாம் ஒரு தேசத்து மக்களென உணர்ச்சி பெற்று நிற்கிறார்கள்.

அவ்வாறான ஒரு நிலை எமது நாட்டிலும் வரவேண்டும் இலங்கைக்கு ஒரு பிரச்சனை என்றால் அது ஒவ்வொரு தமிழருக்கும் ஒவ்வொரு சிங்களவருக்குமான பிரச்சனை என்ற உணர்வு வரவேண்டும். இவ்வாறான இதயத்தை தொட்டுநிற்கும், ரத்தத்தோடு ஊறி நிற்கும் ஒரு தேச உணர்வு என்பது சும்மா வராது அது ஒவ்வொருவரது உளப்பூர்வமான விருப்பத்தில் இருந்து வரவேண்டும் அது ஒவ்வொருவரது வாழ்க்கையோடும் நம்பிக்கைகளோடும் பின்னிப் பிணைந்த ஒரு கலாச்சாரமாக வளர்ந்திருக்க வேண்டும்

அதனை எந்த வகையிலும் திணிப்பதால் வளர்த்து விட முடியாது எந்தப் பலம் கொண்ட கட்டாயத்தினாலும் சாதித்து விட முடியாது பல்தேசிய, பல்லின, பல்மத, பல்மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு தேசத்தில் ஒவ்வொரு மொழி இனத்தவரும் ஒவ்வொரு மதத்தினரும், ஒவ்வொரு தனித்துவமான இன கலாச்சாரம் கொண்டவரினதும் மொழியை, மதவழிபாட்டை, கலாச்சாரப் பண்பாட்டை, அடிப்படைப் பொருளாதார உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமும் அவை ஒவ்வொன்றும் வளம் பெற சமநீதியுடன் ஆதாரமாக இருப்பதன் மூலமும் தான் தேசிய ஒற்றுமையை உருவாக்கிட முடியும்

சிங்களவர்கள் எண்ணிக்கை ரீதியில் பெரும்பாலானவர்கள் என்பதைக் கொண்டோ அல்லது பௌத்தர்கள் பெரும்பாலானவர்கள் என்பதைக் கொண்டோ அல்லது சிங்கள பௌத்தர்களின் கைகளிலே அதிகாரம் உள்ளதைக் கொண்டோ தமிழ் பேசும் மக்களின் மீது இலங்கையர் என்கிற தேசிய உணர்வு ஏற்பட வேண்டும் என்பதை வலிந்து திணிக்க முடியாது. அவ்வாறான திணிப்பு முயற்சிகள் இந்த நாட்டுக்கும் தேசிய சமூகங்களுக்கும் பாதகங்களையே விளைவிக்கும் என்பதே கடந்தகால அநுபவமாகும் என்பதை மறந்து விடக்கூடாது

இலங்கையில் பெரும்பான்மையான சிங்களவர்கள் மத்தியில் இந்த நாடு சிங்களவருக்கே சொந்தம்! இந்த நாட்டை கௌதம புத்தர் பௌத்தர்களுக்காகவே உருவாக்கினார்! துட்டகைமுனு எல்லாளனைத் தோற்கடித்து சிங்களவர்களின் பெருமையை நிலைநாட்டினார்! என்ற வகையான நம்பிக்கைகளும் எக்காளங்களும் இங்கு மித மிஞ்சி நிற்கும்வரை: தமிழர்கள் இந்த நாட்டில் பாதுகாப்பற்றவர்களாக, அதிகார அமைப்பில் பங்கில்லாமல் ஒதுக்கப்பட்ட ஒரு இனமாக, புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாக, ஆட்சியிலிருக்கும் சிங்கள அதிகாரத்திற்கு பயந்து அடங்கி வாழ வேண்டிய ஒரு இனமாக இருக்கின்ற வரை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தாம் எல்லோரும் இலங்கையர் என்ற உணர்வை ஏற்படுத்துவது சாத்தியமாகாத விடயமாகும்

தமிழில் தேசிய கீதம் இருக்கக்கூடாது! தமிழர்களை பெரும்பான்மையினராகக் கொண்ட மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படக்கூடாது! இலங்கையில் வாழும் தமிழர்கள் ஒரு தேசிய இனமல்ல! என்ற தொனிகளில் ஆட்சியிலுள்ளவர்கள் பேசுவது இந்த நாட்டு மக்களை உளப்பூர்கமாக ஒன்று படுத்தமாட்டாது. ஆயுதங்களும், படைகளும் அதிகார மமதைகளும் மக்களின் மனங்களை வெல்லமாட்டா!

மக்களை அன்பாலும், அரவணைப்பாலும் ,அவர்களிடம் நிலவும் பண்புகளையும், நம்பிக்கைகளையும், வழக்கங்களையும், பழக்கங்களையும் அங்கீகரிப்பதன் மூலமே ஒரு தேசத்தவர் என்ற உணர்வை வளர்க்க வேண்டும்.

இந்த நாட்டில் சிறுபான்மையினராக வாழும் மக்கள் எந்த வகையிலும் சிறுபான்மையினர் என்பதற்காக அஞ்சத் தேவை இல்லை: அவர்களுக்கு எந்த வகையிலும் பாரபட்சம் காட்டப்படமாட்டாது: அரசியல் அதிகாரத்தில் அங்கம் பெறுவதில் சிங்களவர்களும், தமிழர்களும் சமநீதி கொண்டிருப்பர் சிறுபான்மை தேசிய இனங்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களில் மாநில சுயாட்சி கொண்ட ஆட்சி அமைப்புக்கள் அமையும்: அவை நிர்வாக அதிகாரங்களோடும் கடமைகளோடும் பொறுப்புக்களோடும் செயற்படும் வாய்ப்புக்கள் கொண்டவையாக இருக்கும் என்பதை அரசுத் தலைவர்கள் உறுதிப்படுத்துவதன் மூலமே இந்த நாட்டின் அனைத்து மக்கள் மத்தியிலும் இந்த நாடு ஒரு தேச மென்ற உணர்வு ஏற்படுவதை நோக்கி முன்னேறும்

இந்த நாடு சமாதானமும் ,சகோதரத்துவமும், முன்னேற்றமும் கொண்ட நாடு என்பதாக உலக வரைபடத்தில் அங்கீகாரம் பெறும் நாளை நோக்கி நடைபோடுவதை இந்த நாட்டின் முதல் குடிமகனான ஜனாதிபதி அவர்களும் அவரோடு இணைந்து நிற்கும் ஆட்சியாளர்களும் உதாரண புருஷர்களாக முன்னோக்கி நடை போட வேண்டும். இதுவே இலங்கை மக்களின் இன்றைய அவா

# அபிவிருத்தி, ஜனநாயகம், அதிகாரப்பகிர்வு ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

## இந்து பத்திரிகை ஆசிரியர் ராமின் கேள்விக்கு ஜனாதிபதி விளக்கம்

**ஜனாதிபதி அவர்களே! முதலாவது ஆட்டத்தில் நீங்கள் அதிகளவு புள்ளிகளை ஈட்டியுள்ளீர்கள்? இரண்டாவது ஆட்டத்தை ஆரம்பித்துள்ளீர்கள். இலங்கைக்கும் இலங்கைக்கு வெளியேயும் பலர் மத்தியில் அதிகளவிலான எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. அவை தொடர்பாக தங்கள் பிரதிபலிப்பு எவ்வாறு அமையும்?**

முதலாவது பதவிக் காலத்தில் இந்த நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு வந்துள்ளேன். பயங்கரவாதத்தை அழித்து சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளேன். இப்போது நாட்டை அபிவிருத்தி செய்வதே எனது குறிக்கோளாகும். அதன் பின்னர் மனங்களையும் இதயங்களையும் வெற்றிகொள்ள வேண்டிய மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய, விடயமுள்ளது. இப்போது இலங்கை ஒரு நாடாகும். இது பிளவுபட்டிருக்கவில்லை. ஆதலால் முழு நாடுமே சகல அனுகூலங்களையும் பெற்றுக்கொள்வதை பார்ப்பதற்கு நாங்கள் விரும்புகிறோம். ஒரு பகுதி மட்டுமல்ல, ஒரு சமூகம் மட்டுமல்ல சகல மக்களுமே அனுகூலமடைவதற்காக பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

**முன்னர் தாங்கள் மூன்று 'டி' க்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அபிவிருத்தி ஜனநாயக மயப்படுத்துதல், அதிகாரப்பகிர்வு அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?**

இல்லை, அபிவிருத்தி முக்கியமானதாகும். அபிவிருத்தியும் சமாதானமும் இல்லாவிடில் எம்மிடம் ஜனநாயகம் இருக்க முடியாது.ஜனநாயகம் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் நாங்கள் ஜனநாயக நாட்டைக் கொண்டுள்ளோம். அடுத்ததாக அதிகாரப் பகிர்வாகும். மக்களின் மனங்களை அறிந்துகொள்வது அவசியமென நாங்கள் கூறியிருந்தோம். அரசியல்வாதிகள் தத்தமது கோட்பாடுகளைக் கொண்டிருப்பார்கள். ஆனால், மக்கள்,புதிய தலைமுறையினர் வேறுபட்ட கருத்துக்களை வைத்திருப்பார்கள். திட்டவட்டமாக அவர்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதை மீள உறுதிப்படுத்திக்கொள்ள நாம் விரும்புகிறோம். இதனை நாங்கள் நிச்சயமாக மேற்கொள்வோம். சமாதானத்திற்கு இவை யாவுமே எமக்குத் தேவைப்படுகிறது.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருப்பவர்களோ ஒன்றுபட்ட இலங்கைக் கட்டமைப்புக்குள் அதிகாரப்பகிர்வுப் பொதியை ஏற்றுக்கொள்ள முடியுமென முதற்தடவையாகக் கூறியுள்ளமை கவனத்திற்கெடுக்கக்கூடிய விடயமாகும். அதனை எவ்வாறு நீங்கள் பார்க்கிறீர்கள்?**

இது மிகவும் சிறப்பான முன்னேற்றமாகும். ஏனெனில் அவர்கள் முன்னர் தனிநாட்டை விரும்பியிருந்தார்கள். இது மிகவும் சிறப்பான முன்னேற்றம். இப்போது அவர்களுடன் பேச்சுவார்த்தையை நாம் ஆரம்பிக்க முடியும்.

**அவர்களிடமிருந்து நீங்கள் அதிகளவை எதிர்பார்க்கிறீர்களா?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து மட்டுமல்லாமல் சகல தமிழ்க் கட்சிகளிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம். எமக்கு அவர்களின் ஆதரவும் தமிழ் மக்களின் ஆதரவும் தேவை. இது மிகவும் முக்கியமானதாகும். பிரபாகரன் விரும்பியிருந்ததை தங்களால் பெற்றுக்கொள்ள முடியாதென்பதை அவர்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும். அதாவது துவக்குகள்,ஆயுதங்கள் மற்றும் பயங்கரவாதத்தின் மூலம் பிரபாகரன் விரும்பியிருந்ததை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாதென்பதை அவர்கள் உணர்ந்துகொள்வது அவசியம். அந்த வழி முறையில் அவர்களால் நாட்டை அச்சுறுத்த முடியாது. பிரபாகரனுக்கு நாங்கள் எதனைக் கொடுக்க மறுத்தோமென்பதையும் அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். ஏனையவர்களுக்கும் நாங்கள் கொடுக்கமாட்டோம். இந்த நடவடிக்கைகளில் நியாயமான முறையில் யதார்த்தமான வழியில் அவர்கள் இருப்பது அவசியமாகும். ஏனையோரின் உணர்வுகளையும் அவர்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

### 1977 இல் நிருவாக சேவையில் 11.1 விகிதமாக இருந்த தமிழ் உத்தியோகத்தர்கள் 1981 இல் 5.7 விகிதமாக சரிவு

அண்மையில் ஜனாதிபதி சிறிலங்கா நிருவாக சேவைக்கு புதிதாகத் தெரிவான 135 நியமனதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினர். அதில் ஒரு தமிழர் கூட இடம் பெறவில்லை, ஒரே ஒரு முஸ்லிம் மட்டும் தெரிவாகியுள்ளார். வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து தோற்றிய பரீட்சார்த்திகளால் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தோற்றியவர்களுடன் போட்டி போட முடியவில்லை. யுத்தத்தின் விளைவுகளால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கல்வித் தரம் மிகவும் சீர்குலைந்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகளுக்கு தனியானதொரு பரீட்சையை நடத்துவதுபற்றி நாங்கள் இப்போது திட்டமிட்டு வருகிறோம் என பொதுநிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளர்.

### சர்வதேச ஜனநாயக மாணவர் இளை ... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏகாதிபத்தியத்திற்கெதிரான உணர்வு எத்தகையதென்பது பிறிற்றோரியாவில் கரைபுரண்ட இளம் உள்ளங்களின் உற்சாகம் பிரதிபலித்தது. சோசலிசம் செத்துவிடவில்லை என்ற உணர்வை அது ஏற்படுத்தியது. கியூபா மீதான பொருளாதார தடையை நீக்குதல், மேற்கு சகாராவின் விடுதலை, ஈராக் ஆப்கானிஸ்தான் யுத்தங்களில் மக்களின் இழப்புக்கள், பாலஸ்தீனர்களின் சுதந்திரம், போபல் நச்சுவாயுவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கியூபாவின் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, கொரிய வளைகுடாவில் பதட்டத்தை தணிப்பது, ஆபிரிக்காவின் வளங்களை சூறையாடுவதை முடிவுக்கு கொண்டுவருவது, இலங்கையில் மனித உரிமை பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.

ஆபிரிக்காவின் வீரியம் மிக்க கலாச்சார நிகழ்ச்சிகளிலிருந்து இந்திய இலங்கை கலாச்சார நிகழ்ச்சிகள், மக்கள் சார் ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன.

தமது உடல்மொழி பாடல்களின் ஊடாக தம்மை ஒருங்கிணைக்கும் ஆபிரிக்க மக்களின் செயற்பாடுகள் உலக இளம் உள்ளங்களை பாரிய அளவில் ஈர்த்திருந்தது.

ஜனநாயகம் சமத்துவம் மனித உரிமைகள் பற்றிய கருத்துக்கள் பொங்கிப் பிரவாகித்தன உலகில் மிகச் சிறந்த இளம் தலைமுறையினர் அங்கு கூடியிருந்தார்கள்

மகாத்மா காந்தி, கால்மாக்ஸ் லெனின் கோசிமின், நெல்சன் மண்டேலா, சே. பிடல் ஆகியோரின் உருவப்படங்கள் தாங்கிய ரீ சேட்களையும் தொப்பிகளையும் பலரும் அணிந்திருந்தார்கள்

டிசம்பர் 12 தொடக்கம் 21ம் திகதி வரை பல்வேறு உலக விடயங்கள் விவாதிக்கப்பட்டன நிதானமான முறையில் தீர்வுகாண்பதற்கான அணுகு முறைகள் முன்வைக்கப்பட்டன.

கல்வி மனித உரிமை இன சமூகங்களின் உரிமைகள் தொழிலாளர்களின் நலன்கள் சிறை சித்திரவதைகளை அனுபவிக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை தேசங்களின் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆபிரிக்க மனிதர்களின் பண்பிலும் கலாச்சாரத்திலும் மிளிர்பவர்கள் என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்

(தேசம் நெற் இணையத்தளத்தில் 2010 டிசம்பர் 15 இல் வெளியான ஆக்கம் ஒன்றிலிருந்து தொகுக்கப்பட்டது. இதனை முழுமையாக பார்வையிடுவதற்கு தேசம் நெற்றின் http://thesamnet.co.uk/?p=23610 இணைய பக்கத்திற்கு செல்லவும்)

புலிகளுடைய வீழ்ச்சியும் அழிவும் பல்வேறு காலகட்டங்களில் நியாயமான விமர்சனங்கள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டு வந்ததுடன் எவ்வாறான அணுகுறைகள் தவறானவை என்பதும் எவ்வாறான அணுகுமுறைகள் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் மிகத் தெளிவாகவே சுட்டிகாட்டப்பட்டு வந்தன. ஆனால், இவ்வாறான ஆரோக்கியமான விமர்சனங்களை எல்லாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானது என்றும் அவ்வாறான விமர்சனங்களை வைத்தவர்களை எல்லாம் துரோகிகளாக முத்திரை குத்தி ஒதுக்குவதில் குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் வெளியான புலிகளின் ஊடகங்கள் முன்நின்றன.

இந்த ஊடகங்கள் என்றைக்குமே புலிகளின் அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் கேள்விக்கு உட்படுத்தவில்லை. அதற்குக் காரணம் அவர்களிடம் கேள்வியோ விமர்சனமோ இல்லை என்பதல்ல. கேள்வியை எழுப்பினால், விமர்சனத்தை முன்வைத்தால், எங்கே தங்களை 'கழற்றி' விடுவார்கள், தங்கள் பிழைப்பு படுத்துவிடும் என்ற பயம்.

இந்த ஊடகங்களின் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கள் வாழ்வை வளம்படுத்திக்கொண்ட இவர்கள், தாயக மக்களின் பெருமூச்சில் குளிர்காய்ந்தனர். அங்கு நடக்கின்ற அவலங்கள் ஒவ்வொன்றையும் காசாக்கிக் கொண்டனர். அதற்காக தங்களை புலியாக்கிய பச்சோந்திகள் இவர்கள்.

புலிகள் வடக்கு கிழக்கில் ஆயுதம் ஏந்திய அல்லது ஆயுதம் ஏந்தாத எந்தவொரு அமைப்பையும் விட்டு வைக்கவில்லை. அவர்களுக்கு எதிரான அல்ல ஆதரவு இல்லாத எந்தவொரு அமைப்பையும் அவர்கள் இயங்க அனுமதிக்கவில்லை. தங்களுக்கு ஆதரவான அமைப்புகளையும் அவர்கள் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கவில்லை. தங்கள் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். இந்த நிலை இலங்கையின் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த நாடுகளிலும் உருவாக்கப்பட்டது. அதனை முன்னின்று நடத்தியவர்கள், ஆயுதம் தரிக்காத புலிகளின் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும். இணையங்களும் இதில் முன்னின்றன.

தங்களுக்கு எதிரானதும் ஆதரவு இல்லாததுமான அமைப்புகளை அழிததொழித்த புலிகளும் வெகுவிரைவிலேயே, அதே அமைப்பைச் சார்ந்தவர்களாலேயே வீழ்ச்சி அடைந்து. அதன் தலைமைகள் முற்றாக அழிக்கப்பட்டு உள்ளது. புலிகளின் வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட உடனேயே புலம்பெயர் நாடுகளில் 300 மில்லியன் டொலர்கள் வரை ஆண்டு வருமானத்தைக் கொண்ட 5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான அசையும் அசையாச் சொத்துக்கள் மே 18 2009ல் காணாமல் போனது. இதற்கு மேல் புலிகளின் சர்வதேசக் கட்டமைப்பில் எப்படியானவர்கள் இருந்தனர், உள்வாங்கப்பட்டனர் என்பதற்கு விளக்கம் அவசியமில்லை. *(லண்டனில் புலிகளின் நிதி விடயங்களுடன் தொடர்பு உடையவர்களின் பட்டியல் தயாராகிக் கொண்டு உள்ளது. மேலதிக தகவல் வைத்துள்ளவர்கள் தேசம் நெற் உடன் தொடர்பு கொள்ளவும். வெகுவிரைவில் தேசம்நெற் இல் இப்பட்டியலைக் காணலாம்.)*

புலிகளுடைய வீழ்ச்சிக்கு மாத்தையா, கருணா பிளவு மட்டும் காரணமல்ல. புலிகளுக்குள் உள்வாங்கப்பட்டவர்களும் முக்கிய காரணகர்த்தாக்களாக இருந்துள்ளனர். குறிப்பாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த பல பச்சோந்திகள் தங்கள் சுயலாப நோக்கங்களுக்காக, புலித்தோல் அணிந்து கொண்டு உள்ளே சென்றனர். இவர்கள் புலிகளின் பல்வேறு கட்டமைப்புகளிலும் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். அவ்வாறான கட்டமைப்புகளில் இந்த புலிகளுக்கு சார்பான ஊடகங்கள் முக்கியமானவை. இந்த ஊடக ஒட்டுண்ணிகள் தமிழ் மக்கள் மத்தியில் உருவான அத்தனை சிந்தனைகளையும் விவாதங்களையும் ஓரம்கட்டி 'ஜிஞ்சா' கலாச்சாரத்தை உருவாக்கி வளர்த்து, உடுக்கடித்து உடுக்கடித்து புலியை முருங்கை மரத்தில் ஏற்றிவிட்டனர்.

இந்த ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தமிழ் உணர்வாளர்களோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் உணர்வாளர்களோ அல்ல. தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் தங்கள் சொந்த லாபங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் எந்த எல்லைக்கும் செல்லக் கூடியவர்கள். புலிகளின் வீழ்ச்சியிலும், அழிவிலும், வன்னி மக்களுடைய அழிவிலும் இவர்களுடைய கரங்கள் இரத்தம் தோய்ந்தவை. இலங்கை அரசும் அதன் படைகளும் புலிகளுடைய எதிரி. ஆனால் அவர்களுடன் கூட இருந்த புலித்தோல் போர்த்திய இப்பச்சோந்திகள் கூட இருந்தே குழி பறித்த மோசடியாளர்கள்.

இவரகளைப் பற்றி தொண்ணூறுக்களின் ஆரம்பத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம். கேணல் கிட்டு இயக்கம் அழிக்கப்பட்டதிலும் வேறுபல படுகொலைகளிலும் சித்திரவதைகளிலும் நன்கு அறியப்பட்டவர். பெண்கள் தொடர்பில் அவருக்கு இருந்த பலவீனமே அவருடைய கால் கைக்குண்டில் பறிபோனதற்குக் காரணம். லண்டன் வந்திருந்த வேளையில் அவருடைய மரணத்துக்கு அண்மையாக சில மாற்றங்கள் அவரிடம் இருந்தது. கிட்டு லண்டனில் உள்ள தமிழர் தகவல் நடுவத்தில் தமிழ் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களையும் கூட்டி ஒரு கூட்டம் வைத்தார். அதற்கு மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டு இருந்தனர். கிட்டுவினால் சித்திரவதைக்கு உட்பட்டவர்களும் வந்திருந்தனர்.

கிட்டுவின் கவனத்தை ஈர்க்க பலர், சிலரை தமிழினத் துரோகிகள், புலிகளுக்கு எதிரானவர்கள் என முண்டியடித்துக்கொண்டு வசைபாடிக் கொண்டிருந்தனர். கிட்டு அனைத்தையும் செவிமடுத்துவிட்டுச் சொன்னார் "*ஒருவர் புலிகளுக்கு எதிராக அல்லது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக எழுதினால் அதில் எமக்கு பெரிய பிரச்சினையில்லை. ஏனெனில் சம்பந்தப்பட்டவரின் அரசியல் நிலைப்பாடு என்னவென்று எமக்கு தெட்டத் தெளிவாகத் தெரியும். என்னைப் பொறுத்தவரை யார் ஆபத்தானவர்கள் என்றால் எம்மைத் துதிபாடிக்கொண்டு, எமக்கு விசுவாசமானவர்கள் போல் நடித்துக் கொண்டு தமது சொந்த அபிலாசைகளை எம்மை வைத்துக் கொண்டு நிறைவேற்றுபவர்கள் தான் எனக்கு கவலை அளிக்கின்றது*" எனக் கூறினார். 20 ஆண்டுகளுக்கு முன்னர் அன்று கிட்டு கூறியது இன்றும் பல ருக்கும் பொருத்தமாக இருக்கிறது.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் (குறள் 448)

ஆட்சி அதிகாரத்தில் உள்ளோருக்கு இடித்துக் கூறும் குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்டி வழிபடுத்துவோர் அவசியம். அவ்வாறான ஆலோசனையைப் பெற்று திருத்திக் கொள்ளும் போது அவர்கள் நல்லமுறையில் நிர்வாகத்தை ஆட்சியை நடத்த முடியும். ஆனால் அவ்வாறு இடித்துரைப்பவர்கள் இல்லையாயின் பகைவரின்றியே அரசு கெடும். மேலுள்ள குறள் இதனையே விளக்குகின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்த புலிகளுக்கு இடிப்பாரையாக இருந்து குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பான ஊடகங்கள் தாங்களும் இடிப்பாரையாக இருந்து புலிகளை வழிப்படுத்தவில்லை. இந்த ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் புலிகளுக்கு நல்ல நண்பர்களாக இருந்திருந்தால் புலிகளுக்கு கசப்பான விடயங்களையும் சுட்டிக்காட்டி அவர்களை வழிப்படுத்தி இருப்பார்கள். ஆனால், இவர்கள் அவ்வாறு வழிப்படுத்த முயன்றவர்களையும் அதனைச் செய்ய விடவில்லை. அதனால் புலிகள் இந்த ஊடகங்களால் அவர்களைச் சுற்றி உருவாக்கப்பட்ட மாயைக்குள் சிக்கி வீழ்ச்சி அடைந்து அழித்தொழிக்கப்பட்டனர்.

நாசமாய் போவாரே உங்கட சொந்தப் பிள்ளையளா இருந்தால் இப்பிடியா செய்வியள்? அந்த வன்னிச் சனம் எல்லாம் வெள்ளைக் கொடியோட புலிகளைத் தாண்டிப் போக சுட்டுக் கொன்றான்கள். தப்பிப் போக நிண்ட சனத்தை செல் அடிச்சுக் கொன்றியளே. அப்பிடிப் போன சனத்தை கூச்சமில்லாமல் துரோகி என்றியள். சிங்கள இராணுவத்தை எதிரிப்படை என்று சனத்துக்கு தெரியும். ஆனால் 300,000 வன்னி மக்களை மந்தைகளாக அடைத்து வைத்து எதிரியை வைச்சு 50,000 சனத்தை கொன்று அதை வைச்சு மனித உரிமை அரசியல் செய்கிறம் என்று சொல்லுறியளே இதைவிட ஒரு பொறுக்கி அரசியல் உலகத்தில எங்கேயும் நடக்கேல்லை.

தளபதி ரமேஸ் மட்டுமல்ல தலைவரும் கழுத்தில் கிடந்த சயனைட் குப்பியை கழற்றி எறிந்துவிட்டு, எதிரிகளின் பாசறையை நோக்கி வெள்ளைக் கொடியுடன் சென்றது காணொளியாக உள்ளது. யுத்தத்தின் இறுதி நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சரணடைய ஏற்பாடு செய்யப்பட்ட நாடகத்தில் சரணடைந்தார். இந்த ஒளிப்பதிவு சிலரால் பார்க்கப்பட்டு உள்ளது. பிரபாகரனை என்ன செய்ய வேண்டும் என்ற முடிவை இந்தியா இலங்கையிடமே விட்டு விடவே பிரபாகரனுக்கு சயனைட் வழங்கப்பட்டது. ஆனால் வே.பிரபாகரன் அதனை எடுக்கவில்லை. அதன் பின்னர் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலைக்கு புலிகளைச் சுற்றி மாயவலை கட்டமைத்து அவர்களே தங்கள் பலம், பலவீனங்களை அறிய முடியாத அளவுக்கு அவர்களை உசுப்பேத்திய புலித்தோல் போர்த்திய பச்சோந்திகள் புலிகளை மட்டும் அழிக்கவில்லை அவர்களுக்காக வன்னி மக்களையும் அழித்து, தங்கள் சுய இருப்பையும், சுயலாபத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டவர்கள். அவர்கள் மே 18, 2009 வரை எழுதி வந்த பொய், புரட்டுக்கள் அனைத்தும் அம்பலத்திற்கு வந்து, அவர்களுடைய ஒவ்வொரு செய்தியும் கட்டுரைகளுமே அம்மணமாகி உள்ளது. ஆனாலும் தங்கள் சுய இருப்பையும் எதிர்கால சுயலாபத்தையும் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்காக உண்மைகளை மறைத்து தொடர்ந்தும் மாயைகளையே கட்டமைக்கின்றனர்.

(நன்றி: தேசம் நெற்)

## புது வருட நம்பிக்கை ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**வாழ்வை மீள் கட்டியெழுப்புவது ஆதரவற்றுப் போன பிள்ளைகளுக்கு அரவணைப்பையும் பரிவையும் நல்குவது குடும்பத் தலைவரை இழந்த பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்க்கை சுமுகமான தாகவும் பாதுகாப்பானதாகவும் அமைவதற்கு ஏற்பாடு செய்வது என பல கடப்பாடுகள் இருக்கின்றன.**

**இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயங்களாகிப் போன தமது நிலங்கள் மீளக்கிடைக்கும்**

**தமது அன்றாட வாழ்க்கையில் நிலவும் இராணுவ மயப்பட்ட சூழல் நீங்கும்**

**இயல்பாக எமது சமூக பொருளாதார நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதற்கான சூழ்நிலை உருவாகும்**

**எமது வழிபாட்டு தலங்கள் எமது வாழ்விடங்கள் மீதான ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்கள் நீங்கும்**

**கொலை கடத்தல் பாலியல் பலாத்காரம் போன்ற வன்முறைகள் இனிமேலும் நிகழாது எமக்கு பாதுகாப்பான வாழ்க்கை இருக்கிறது சட்டத்தின் நீதியின் ஆட்சி நிலவுகிறது.**

**நலிவுற்றோர் மீது நாட்டாண்மை செய்யாத சிவில் நிர்வாகம் இருக்கிறது. என்பதெல்லாம் புதுவருடக் கனவுகளாக இருக்கலாம்.**

**சுதந்திரமாக தன்மானத்துடன் தலைநிமிர்ந்து எதுவித அச்சமுமின்றி எமது சொந்த கடமைகளை செய்கிறோம் கலை கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம் என்ற மாதிரியான நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.**

**கல்வியும், அறநெறிச் செயற்பாடுகளும் சாந்தியும் நல்பியல்பும் ததும்பும் வாழ்வொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும்.**

**யுத்தம் சுனாமி இவை இரண்டினாலும் பேரழிவை சந்தித்த மக்களின் வாழ்வு ஒளிபெற வேண்டும்.**

**மானிடர்களின் வாழ்வை பொங்கி பிரவகிக்கச் செய்வதும் துன்ப சாகரத்தில் உழலச் செய்வதும் அமானுஷ சக்திகள் என்பதை விட மானிட சக்திகளே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதிகாரத்தில் உள்ளோர் பகை வன்மம் பழிவாங்கல் உணர்வுகளுக்குப் பதிலாக நல்லியல்புகளை வெளிப்படுத்தினால் 2011 சிறக்கும் ஒரு மங்கள நிகழ்ச்சியின் கோலாகலமாக வாழ்க்கையை மாற்ற முடியும்.**

**மனதினில் ஒளியுண்டானால் வாழ்க்கையில் ஒளியுண்டாகும்.**

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழ ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் வெள்ளம் காரணமாக குளங்கள் நிரம்பி உடைபெடுக்கும் அபாயம் ஏற்பட்டபோதும் சம்பந்தப்பட்ட மத்திய, மாகாண நீர்பாசன திணைக்கள அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் இரவு பகலாக பெருமுயற்சி எடுத்து குளங்களை பாதுகாத்ததுடன் பாரிய அழிவில் இருந்தும் மாவட்டத்தை பாதுகாத்தமை பாராட்டுக்குரியதாகும். குளங்கள் நிதானத்துடனும் தொழில் நுட்ப ரீதியாகவும் அவதானத்துடனும் பாதிப்பின்றி திறந்து விடப்பட்டன.

சிறிய நீர்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள புளுக்குணாவ குளம், கங்காணியார் குளம், கடுக்காமுனைக் குளங்கள் திறந்துவிடப்பட்டதுடன் மதுரங்கேணி குளம், கிரிமிச்சை ஓடைகுளம், தரவைகுளம், பாலையடி ஓடைக் குளம் போன்றவை நிரம்பி நீர் வழிந்தோடியது.

இதேவேளை பெரிய நீர்பாசனக் குளங்களான உறுகாமம் குளம், நவகிரிக் குளம், உன்னிச்சைக் குளம், வாகனேரிக்குளம், புணானை அணைக் கட்டுக் குளங்கள் திறந்து விடப்பட்டதோடு கித்துள் குளம், கட்டு முறிவுக்குளம், தும்பங்கேணிக்குளம், வடமுனைக் குளம், வெலிக்காக்கண்டிக் குளம் என்பன நிரம்பி வழிந்தன.

மழைவெள்ளம் காரணமாக குளங்கள் திறந்துவிடப்பட்டதனாலும் குடலை, கதிராக [illegible] விவசாய வயல்கள் நீரில் தொடர்ச்சியாக மூழ்கியதால் அனனம் வாங்க முடியாமலும், கதிருக்குள் நீர் சென்றதினாலும் நீரில் மூழ்கிய அனைத்து வேளாண்மையும்





பழுதடையக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் நீர்சாவியாகவும் மாறியுள்ளது. வேளான்மை கதிர்பறியும் காலத்தில் இவ் வெள்ளம் ஏற்பட்டமையே விளைச்சலை பெறமுடியாமைக்கு காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இத்தோடு இப்பிரதேசங்களில் துரிசிகள், வாய்கால் கட்டுகள், ஆற்றுக் கட்டுகள் வரம்புகள் சேதமடைந்துள்ளதுடன் பல வயல்களில் மணல் வாத்தும் உள்ளது. இவ் வெள்ளத்தினால் அழிவடைந்த சுமார் 70 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வேளாண்மையும் பாதிக்கப்பட்டுள்ளது .

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதிக்கப பட்ட விவசாயப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பின்வரும் நிவாரணங்களை வழங்க மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் ஆவன செய்யவேண்டுமென வினையமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

(1) உடைந்த துரிசுகள், அணைக்கட்டுகள், வாய்கால்கள், வயல் வீதிகள், மணல் மூடிவிட்ட வயல் நிலங்கள், மற்றும்குளங்கள் திருத்தப்பட வேண்டும்.

(2) விவசாயிகளுக்கு திருத்த வேலைகளுக்காக குறைந்த விலையில் இயந்திரங்கள் உபகரணங்க்ளை வழங்குதல் வேண்டும் .

(3) விவசாயிகளை பாதிப்புகளிலிருந்து மீட்பதற்கு உடனடியாக அரசாங்கம் நஷ்ட ஈடுகளை வழங்க வேண்டும்

இவ்வாறு தோழர் துரைரெட்ணம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு சரித்திரத்தில் இடம்பெற வேண்டும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இரண்டாவது தடவையாக பதவியேற்றதை தொடர்ந்து பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன் விடுத்த வாழ்த்துச் செய்தி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மீண்டும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக பதவியேற்றதற்கு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

பொருளாதார அபிவிருத்தியின் சிகரங்களை தொடுவதற்கான வாக்குறுதியை அவர் மக்களுக்கு அளித்துள்ளார். விமான போக்குவரத்து, சமுத்திரம், மின்சாரம், வர்த்தகம், அறிவு ஆகிய ஐந்து துறைகளிலும் இலங்கை எதிர்காலத்தில் பிரகாசிப்பதற்கான வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. சமாதானம் நிலைநாட்டப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இந்த இலக்குகள் மகிழ்ச்சிகரமானவை. இலங்கையின் சகல இன மக்களுக்கும் தெம்பூட்டுபவை. எனினும் இலங்கையின் இன சமூகங்களிடையே நிலவும் அரசியல் அதிகாரப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதனூடாகவே இந்த இலக்குகளை எய்த முடியும்.

உலக வரலாற்றில் ஜனநாயகமும், சமூகங்களிடையே சமூக சமத்துவமும் நிலைநாட்டப்பட்ட நாடுகளிலேயே வெற்றிகரமான சமூக பொருளாதார சாதனைகள் நிகழ்ந்துள்ளன.

எனவே இலங்கை அனைத்து இன மக்களினதும் நாடு, பல்லினங்களின் நாடு என்பது உறுதிப்படுத்தப்படுவதும் தனி மனித ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதும் நாம் முன்னேற்றப்பாதையில் செல்வதற்கான அடிப்படை நிபந்தனைகளாகும். தேசிய வாழ்வினுள் தமிழ், முஸ்லீம் மக்கள் உள்வாங்கப்படும் விதமாக அரசியல் அதிகாரப் பகிர்வு நிகழ வேண்டும்.

இதனை ஜனாதிபதி தனது பதவிக் காலத்தில் உறுதிப்படுத்தி சரித்திரத்தின் செழுமைமிகு பக்கங்களில் தனது பெயரை பொறிக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம். அதனை மேற்கொள்வதற்குரிய ஆற்றலும், பலமும் அவருக்கு இருக்கிறது.

இலங்கையில் 30 வருடமாக நிலவிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தது போல் இனப்பபிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதிலும் ஜனாதிபதி அவர்கள் ஆற்றலுடன் செயற்பட முடியும் என நாம் நம்புகிறோம்.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் சகல தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக அமைச்சரவை பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். ஐயா அமைச்சரவை பேச்சாளர் அவர்களே இப்படி எத்தனை காலம் தான் சகலதரப்பினருடனும் பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்று சொல்லி அரசியல் தீர்வு பற்றிய ஒரு முடிவுக்கு வராமலேயே இழுத்தடிக்கப் போகிறீர்கள். இப்படித்தான் சொல்லி மாண்புமிகு பிரேமதாசா ஐயா அவர்கள் 4வருடத்தை இழுத்தடித்தார். பிறகு வந்த ஜனாதிபதி அம்மா சந்திரிக்கா அவர்கள் 9வருடத்தை இழுத்தடித்தார். இடையில் தடக்கி வந்த ரணில் விக்கிரமசிங்க 2வருடமாக எங்களையெல்லாம் ஏமாற்றியுள்ளார். உங்களது அரசாங்கமும் அமைசர் பேராசிரியர் திஸ்ஸவிதாரன அவர்கள் எல்லாத்தரப்பினருடனும் பேசுவார் என்று சொல்லி 6 வருடங்கள் கடந்துவிட்டன. ஐயா மீண்டும் நீங்கள் இப்பொழுது எவடம், எவடம் புளியடி, புளியடி என்று கண்ணைக்கட்டி கொண்டுபோகப் பாக்கிறீர்களா? 30 வருடங்களாக யுத்தத்தால் நாடு நாசமடைந்து போய்க் கிடக்கிறது. இனியாவது சமாதானமும், அமைதியும் சகோதரத்துவமும், ஜனநாயகமும், சமநீதியும், வராதா?

## குறும்பனின் சும்புகள்

யாழ்ப்பாணத்தில் அச்சநிலை நிலவுகிறது அங்கு சர்வகட்சிக் குழுவை அனுப்ப வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். ஐயா! நீங்கள் இப்பொழுது எந்த நாட்டில் இருக்கிறீர்கள்? அல்லல் பட்டு நிற்கும் வடக்கு கிழக்கு மக்களை குறிப்பாக கொலைகள்,கொள்ளைகள் மலிந்து கிடக்கும் யாழ்ப்பாணத்தை நீங்கள் வந்து பார்த்தீர்களா? சர்வ கட்சிக் குழுவை கோருகின்ற நீங்கள் முதலில் உடனடியாக உங்கள் கட்சியின் குழுவை அனுப்பி இங்குள்ள நிலைமைகளைப் பற்றி இங்குள்ள மக்களிடம் இருந்து தெரிந்து கொள்ளலாமே? ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடக்கின்ற காலங்களில் மட்டும் தான் நீங்கள் வடக்கு கிழக்கு மக்களைப் பார்க்க வருகிறீர்கள் மற்றபடி இங்குள்ள மக்களின் அவலநிலையும், அந்தர நிலையம் உங்கள் வெறும்வாய்க்கு அவல் கிடைச்ச மாதிரி தானே?

யாழ்ப்பாணத்தில் குடிமக்கள் 10 பேருக்கு ஒருவர் என்ற அளவில் வீதிக்கு வீதி அரசபடையினர், தேவைப்படும் போது போற வாறவர்களை நிறுத்தி அடையாள அட்டைகளையும் பரிசோதனை செய்கிறார்கள். இதைவிட யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. வீதிக்கு வீதி பொலிஸாரும் நிற்கிறார்கள். இவற்றுக்கு மேலாக அரசு உளவுப்படையினரும், அரசுக்கு உளவுத்தகவல் கொடுப்போரும் குடாநாட்டில் இருக்கிறாார்கள். யாழ்ப்பாணத்தில் நடக்கும் கொலைகள், கொள்ளைகள் தொடர்பாக பரபரப்பையும். மக்கள் மத்தியில் பயப்பீதியையும் உருவாக்கும செய்திகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. இப்படி இருக்கையில் அரசாங்கம் என்ன நடக்கிறது என்று தெரியாதது போல யாழ்ப்பாணத்தில் நடப்பவற்றை ஆராய வேண்டி இருப்பதாக இப்போது கூறுவது வேடிக்கையாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் நடக்கும் கொலைகள், கொள்ளைகள் அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களையும் மீறியா நடக்கிறது என்ற கேள்வி எழுந்துள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாக பயங்கரவாத கொடூரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து இன்று அந்த கொடூரங்களுக்கெல்லாம் முடிவுக்கு வந்துவிட்டது. என்று நினைத்துக் கொண்டிருந்த மக்கள் மீது மீண்டும் பயங்கரவாத முகம் வெவ்வேறு வடிவங்களில் தலைகாட்டத் தொடங்கியுள்ளது. அரசாங்கம் தன்னைக் காப்பாற்றுவதற்காக கருத்து தெரிவிப்பதை விடுத்து பொதுமக்களைக் காப்பாற்ற முன்வருமா?

# ஒற்றுமையே பலம் தரும்

புளொட் அமைப்பின தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலில் ஒரு பகுதி

**கேள்வி: எதிரும் புதிருமாக இருந்த தமிழ்க் கட்சிகள் தற்போது ஒன்றுகூடியுள்ளன. இது வரவேற்கத்தக்க விடயம். எனினும் கட்சித் தலைவர்கள் மத்தியில் தம்மைப் பற்றித் தாமே பெருமை கொள்ளும் 'ஈகோ' மனப்பான்மை இன்னமும் இருப்பது போலத் தெரிகிறதே?**

பதில்: தமிழ் அரங்கிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான சந்திப்பு தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைந்து செயற்படக்கூடியதொரு நிலையை தோற்றுவித்துள்ளது. ஒரேவிதமான கொள்கைகளைக் கொண்டிருக்கா விட்டாலும் தற்போது ஒன்று சேர்ந்திருக்கின்றன. அது வரவேற்கப்பட வேண்டிய விடயம். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.

அரசியலில் மாத்திரமல்ல தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூட அந்த 'ஈகோ' இருக்கிறது. தமிழ்க் கட்சிகளுடனான கலந்துரையாடலில் என்னால் ஒரு விடயத்தைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. எல்லாக் கட்சித் தலைவர்களும் ஓரளவுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பேசினார்கள். தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஒற்றுமையைக் கொண்டுவர வேண்டும் என்பதை உணர்ந்து பேசப்பட்டன. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதன் பிரதிபலிப்பாக இரு தரப்பிலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து பேசி வருகிறோம்.

மக்களின் நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வது, ஜனாதிபதி தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தீர்வை முன்வைத்தால் அதனை தான் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக கூறியிருக்கிறார். ஜனாதிபதி மாத்திரமல்ல இந்திய அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் இதனையே வலியுறுத்துகின்றனர்.

எனவே திம்பு மாநாட்டின் பின் அனைத்து தமிழ்த் தரப்புக்களும் இப்போது ஒன்று கூடியிருக்கின்றன. எல்லாக் கட்சிகளும் ஒன்றாகக் குரல் கொடுக்கும் என்றால் நன்றாக இருக்கும். அந்த நிலைப்பாட்டில் கட்சிகள் இருக்கின்றன.

**கேள்வி: எவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்தப்படும் என நம்புகிறிர்கள்?**

பதில்: இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனினும் ஒரு கூட்டான செயற்பாட்டிற்கு இன்னும் வரவில்லை. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவர்களின் தேவைகளையும் நிலைமைகளையும் கட்சிகள் அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறி வருகிறன.

**கேள்வி: ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அரசியல் ரீதியான பிரச்சினைகளை எவ்வாறு கையாளப்போகிறீர்கள்?**

பதில்: ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு பிரேரணைகளை முன்வைத்திருக்கின்றன. ஆனால் அடிப்படையில் எல்லாக் கட்சிகளும் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றன. அதில் அவர்கள் சொல்லும் போது மொழிகள் வித்தியாசப்பட்டிருக்கலாமேயொழிய அடிப்படையில் வட கிழக்குக்கு சரியான அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்பட வேண்டுமென்பதை தெளிவாக கூறியிருக்கின்றன. இது தொடர்பில் வேறுபாடுகளை என்னால் பார்க்க முடியாமல் இருக்கிறது. கட்சிகளைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக அர்ப்பணிப்புக்களுடன் போராடிவந்த கட்சிகள் தான் இருக்கின்றன. சில வேளைகளில் பாதைகள் மாறியிருக்கலாம்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க யோசித்திருக்கலாம். ஆயுதப் போராட்டம் இனி சரிவராது, பேசித் தீர்க்கலாம். ஜனநாயக ரீதியில் செயற்படுவோம் என கட்சிகள் யோசித்திருக்கலாம். புலிகளைத் தவிர ஏனைய அமைப்புக்கள் எல்லாமே 87 இற்கு பின் ஈழக் கோரிக்கையை கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வைக் காணலாம் என்ற முடிவுக்கு வந்தன. ஆகவே என்னைப் பொறுத்த வரையில் அடிப்படையில் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

நீங்கள் ஆரம்பத்தில் கூறியதுபோல 'ஈகோ' தான் பிரச்சினையாக இதுவரை காலமும் இருந்தது. அதையும் களைந்து ஒரு ஒற்றுமைப்பாட்டை காண்போமாக இருந்தால் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வைக் காணக்கூடியதாக இருக்கும். இதில் கலந்துகொள்ளும் கட்சிகள் அனைத்தும் ஆரம்பகாலம் தொட்டு இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்த அழிவுக்கு அனைவருமே பொறுப்புக்கூற வேண்டியுள்ளவர்கள். இன்று தமிழ் மக்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு புலிகளை மட்டும் குறை கூறிவிட்டு ஒதுங்கிவிட முடியாது. உயிரோடு இருக்கும் நாங்களாவது தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடு இருக்கிறது. இதனை நிச்சமாகச் செய்ய வேண்டும் அந்த நம்பிக்கை எமக்கிருக்கிறது. இதனை எல்லாக் கட்சிகளுமாகச் சேர்ந்து செயற்பட வேண்டும் என்று ஆர்வத்துடன் இருகின்றன.

**கேள்வி: தமிழ் மக்களின் தற்போதைய நிலைமைக்கு ஆரம்ப காலத் தமிழ்த் தலைவர்களே காரணம் என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்படுகிறதே?**

பதில்: அதனை நான் அப்படிப்பார்க்கவில்லை. அப்போதைய தலைவர்கள் எவரும் தங்களது சுயலாபங்களுக்காக இளைஞர்களைத் தூண்டி விட்டனர் எனக் கூறுவது தவறு. அப்போதிருந்த சூழ்நிலையில் அவர்கள் எடுத்த முடிவுகள் சரியாக இருந்திருக்கும். அவர்களைப் பொறுத்த வரையில் சாத்வீகப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து போராட்டங்களை முன்னெடுத்த வேளையில் அப்போது ஆட்சியில் இருந்த அரசுகள் அதனை இராணுவ ரீதியாக நசுக்க முற்பட்டன. இளைஞர்களைத் தூண்டி விட்டதன் தாக்கம் அப்போதைய தலைவர்கள் மத்தியில் இருந்திருக்கலாமே தவிர ஒருபோதும் நேரடியாக ஈடுபடவில்லை என்றே கூறவேண்டும். சாத்வீகப் போராட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. தொடர்ந்து அழிவையே பார்க்கிறோம் என்ற காரணத்தினால தான் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது தவறு எனக் கூறமுடியாது. கடைசிக்காலங்களில் இயக்கங்களிடையே ஏற்பட்ட போட்டிகள், அத்துடன் புலிகள் தாங்கள் தான் தமிழ் மக்களை காக்க வந்த இரட்சகர்கள் எனக்கூறி ஏனைய இயக்கங்களைப் பலவீனப்படுத்தினர். தாங்கள் தான் ஒரேயொரு இயக்கம் என்றனர். புலிகள் அழிக்கப்பட்ட உடன் தமிழ் மக்களின் போராட்டம் முழுவதும் அழிக்கப்பட்டதான ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டது. இதற்கும் போராட்ட ஆரம்பத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. ஏனெனில் அது எமது தவறு. இதற்காக நாங்கள் அப்போதைய தலைவர்களைக் குறைகூறுவதில் பலனில்லை. அவர்கள் அன்று இருந்த நிலைமைக்கேற்றவாறு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்கள்.

விடுதலைப் புலிகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் 87 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட அன்று இந்நாட்டில் தனிநாடு என்ற கோரிக்கை சாத்தியமற்றதொரு விடயம் என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். இந்தியாவின் அல்லது ஏதாவதொரு நாட்டின் உதவிகள் இல்லாமல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனியொரு நாட்டை உருவாக்கியிருக்க முடியாது. அதனை சரியாக உணர்ந்து கொள்ளத் தவறியிருக்கிறார்கள். அடைய முடியாத இலக்குக்காக அநியாயமாக எமது மக்களைப் பலியாக்கிவிட்டார்கள்.

எம்மைப் பொறுத்த வரையில் இதனை நாங்கள் 1987 இல் நன்றாக உணர்ந்து கொண்டோம். போராட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் நலிவடைந்த வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். அவர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் நாங்கள் செயற்பட்டு வந்திருக்கிறோம். அக்காலப்பகுதியில் தனிப்பட்ட நன்மைகள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

வவுனியாவில் நாங்கள் மிகப் பாரியளவில் வேலைகளை முன்னெடுத்துச் சென்றோம். அரசாங்கத்தின் பங்காளிகளாக இல்லாமல் அவர்களின் உதவியை பெற்றுக்கொண்டு மக்களுக்காக சேவையாற்றினோம். ஆனால் எமக்கு துரோகிகள், ஒட்டுக்குழுக்கள், ஐந்தாம் படை என்ற பெயர்களெல்லாம் சூட்டினார்கள். இறுதியில் இன்று நாம் என்ன நிலையில் இருக்கின்றோம். இலங்கையில் ஆயுதப் போராட்டத்தால் ஈழம் அமைக்க முடியாது நாட்டில் பாரிய அழிவு ஒன்றை உருவாக்கும் என்பதை உணர்ந்துதான் இந்த மக்களைக் காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டோம். அக்காலப்பகுதியில் இதனை மக்களும் கூட உணர்ந்து கொள்ளவில்லை. கட்சிகளும் உணர்ந்து கொள்ளவில்லை. எங்களைப் பொறுத்த வரையில் அன்று செய்ததை அன்று சொன்னதைத்தான் இன்றும் என்றும் சொல்வோம் செய்வோம். மக்களின் மறுவாழ்வு மக்களின் அடிப்படை உரிமைகள் இரண்டு விடயங்களிலும் எப்போதும் பின்வாங்கவில்லை பின்வாங்கப் போவதுமில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் ஓய்ந்தும் ஓயாத வன்முறை

பணத்திற்காக ஆட்களை கடத்துவது என்னவென்று தெரியாத மர்மமான காரணங்களுக்காக கொலை செய்வது பாலியல் பலாத்காரம் என்பன இப்போது ஜனரஞ்சக மயப்பட்டு வருகின்றன.

பொலிஸ் இராணுவத்தின் பிரசன்னம் பலமாக இருக்கும் சூழ் நிலையிலேயே இவை நடைபெறுகின்றன. நாள்தோறும் ஒளி பரப்பப்படும் தொலைக்காட்சி தொடர்களில் வரும் மயிர்க்கூச் செறியும் சம்பவங்கள் போன்றே இவை நிகழ்கின்றன.

இத்தகைய சம்பவங்களுக்கு முடிவு கட்டாவிட்டால் மனித தார்மீக நெறிமுறைகளும் பெறுமானங்களும் அழிந்துபோய்விடும்.

யுத்தம் முடிந்தும் வன்முறை எமது சமூகத்தில் ஓய்ந்துவிட விலலை அது புதிய வடிவத்தை எடுத்துள்ளது.

அளவெட்டியில் கோயில் வாத்தியகாரர் சுடப்பட்டார். சங்கானையில் பூசகர் கொல்லப்பட்டார், உரும்பிராயில் வலய கல்வியதிகாரி கொல்லப்பட்டதுடன் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் கடத்தப்பட்டார் ஆட்டோ சாரதி ஆட்டோவுடன் காணாமல் போயுள்ளார். மீசாலையில் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.. வடமராட்சியில் இளைஞர் ஒருவர் சுடப்பட்டதுடன் 6 பிள்ளைகளின் தாய் கடத்தப்பட்டுள்ளார்.

அன்றாடம் நிகழும் கோஷ்டி சண்டைகள் பெண்கள் மீதான வன்முறைகள் வீடுகளில் நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து பெண்களை துன்புறுத்தும் பீதியூட்டும் செயல்கள் நாளாந்தம் நடைபெறும் கொள்ளை வழிப்பறி என்பன சட்டம் நீதித்துறை என்பவற்றின் குறைபாடுகளையே சுட்டிக்காட்டுகின்றன.

குறிப்பாக இத்தகைய சம்பவங்கள் பல்கிப்பெருகிவிட்டன. இத்தகைய அராஜகம் தொடர்வதற்கு அனுமதிப்பது கல்வி கலாச்சார பொருளாதார நடவடிக்கைகள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ன விலை கொடுத்தாவது சமூகப்பெறுமானங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். முதலில் பிரதேச செயலக மட்டத்தில் சமூகப்பெரியவர்கள் ஆர்வலர்களை கொண்ட விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இத்தகைய குழுக்களுக்கு சட்டம் ஒழுங்கு துறையினர் பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும்.

இலஞ்ச லாவணியத்தில் திளைத்திருக்கும் நிர்வாகத்திலிருக்கும் சில பிரகிருதிகளுக்கு இத்தகைய சூழ்நிலை வாய்ப்பாகவே அமைகிறது சட்டம் ஒழுங்கும் இதற்கு விதிவிலக்கல்ல.

நிர்வாகம் மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை தம்மை மாற்றியாக வேண்டும். ஊடகங்கள் சமூகப் பிரக்ஞை உள்ள மனிதர்கள் இதற்கான இடையறாத தொடர்ச்சியான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.. சமூகத்தில் விழிப்புணர்சி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இல்லையேல் எமது சமூகம் பாதீனியவிஷசெடி படர்ந்த நிலம் போலாகிவிடும். மனிதர்கள் போல் நடமாடும் பாதீனிய விஷங்கள் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

# யாழ் மாவட்டத்தில் நடந்த கொலைகளுக்கு காரணம் தனிப்பட்ட பிரச்சினையா?

யாழ் மாவட்டத்தில் அடுத்தடுத்து நடந்துள்ள மூன்று கொலைகள் தனிப்பட்ட பிரச்சனைகள் காரணமாகவே இடம்பெற்றன என யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா தெரிவித்துள்ளார். கடந்த 7 ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுமக்களின் பங்களிப்புடன் கூட்டப்பட்டிருந்த பொலிஸ் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் இவ்வாறான கருத்து மக்கள் மத்தியில் ஒரு திருப்தியை ஏற்படத்துவதாகவோ அல்லது மக்களுக்கு பாதுகாப்பு தொடர்பான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவோ காணப்படவில்லை யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உண்மைகளை மக்களுக்கு மூடி மறைக்க முனைகிறார் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது ஒரு சில சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக நடந்திருந்தாலும் இந்த மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்குள் நடந்துள்ள கொலைகள் தனிப்பட்ட காரணங்களுக்கு அப்பால் மக்கள் சமூகத்தையே அச்சமூட்டக்கூடிய வேறு பல சந்தேகங்கள் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அரச படைகள் தொடர்பாகவும் விடுவிக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் தொடர்பாகவும் அரசாங்கத்தோடு அங்கமாக உள்ள கட்சிகளின் உறுப்பினர்கள் தொடர்பாகவும் மக்கள் இங்கு நடைபெற்று வரும் கொலைகள், கொள்ளைகளில் சந்தேகப்படுபவர்களாகவே உள்ளன.

மேலும் கொள்ளையிலும். கொலையிலும் நவீன கைத்துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் துப்பாக்கியை பிரயோகிப்பதில் நன்கு பயிற்றப்பட்டவர் போல் காணப்படுகின்றனர். அத்தடன் சங்கானை பூசகர் கொலையில் அரச படையைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். உரும்பிராயில் வெள்ளை வானில் கடத்தப்பட்டவர். புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது. குடத்தனையில் கொல்லப்பட்ட இளைஞன் ஒரு முன்னாள் புலி உறுப்பினர் என புலிகள் சார்பானவர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை அவர் ஈ.பி.டி.பி. எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான நிலைமைகளை தொகுத்து பார்க்கின்ற போது இங்கு வெறுமனே திருடர்களின் கொள்ளை நடவடிக்கைகளும் தனிப்பட்ட காரணங்களால் கொலைகளும் இடம்பெறுகின்றன. என்று நம்புவதற்கு இல்லை.

பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் பொது மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக அவ்வாறு கூறியிருப்பினும் வலுவான சந்தேகங்களின் முழுமையை அவர் தெரியாமல் இருக்கிறார் எற்பதற்கில்லை. எனவே அவர் பகிரங்கத்தில் என்ன சொல்லுகிறார். என்பதை விட அவர் தனக்கு அளிக்கப்பட்ட கடமை, பொறுப்பு, அதிகாரம் என்பவற்றின் அடிப்படையில் நடந்து முடிந்துள்ள கொலைகள், கொள்ளைகளையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு தயங்காது செயற்பட வேண்டும்

# அபிமன்யு பதில்கள்

*த.மயூரன்.* *தெஹிவளை*

**லண்டனில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டத்தினால், ஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தில் மகிந்த இராஜபக்ஷ பேசுவதாக இருந்த நிகழ்வு பாதுகாப்பு கருதி ரத்துச் செய்யப்பட்டது பற்றி உங்கள் கருத்து என்ன?**

அந்த ஆர்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்களதும், அதில் பங்கு பற்றியவர்களதும் நோக்கங்கள் பலதரப்பட்டவை. அந்த நோக்கங்கள், இலங்கையில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தங்கள் வாழ்வை மறுபடியும் கட்டியெழுப்ப, சிதைந்திருக்கும் அவர்கள் வாழ்க்கை சீரமைய வழி சமைப்பதாக அமையும் என்றால்தான் அந்த ஆர்ப்பாட்டங்கள் உண்மையிலேயேயே மக்கள் நலன் சார்ந்தவையாக அமையும். இதனையே அளவுகோலாக வைத்து அநத ஆர்ப்பாட்டங்களின் நோக்கங்களைச் சற்று அறிவுபூர்வமாகச் சீர்தூக்கி கருத்தைத் தெரிவிப்பதானால்:-

**நோக்கம் 1:** தங்களது கணிப்பில் இராணுவ ரீதியாக என்றுமே தோற்கடிக்கப்பட முடியாத புலிகளை மகிந்த அரசு தோற்கடித்தமையால் ஏற்பட்ட ஏமாற்றம், தோல்வி, ஆத்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்துதல்.

**கருத்து:** பயங்கரவாதச் செயல்களில் தான்தோன்றித்தனமான இறுமாப்புடன் ஈடுபட்டு, முன்னெப்பொழுதுமே இல்லாத இழிநிலைக்கு இப்பொழுது தங்களைக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் என இலங்கையில் வாழும் தமிழர்களில் பெரும்பான்மையோரால் கருதப்படும் புலிகளின் தலைமைத்துவம், அன்றில்லாவிட்டால் என்றோ நிச்சயமாக அழிந்திருக்கும்? அழிக்கப்பட வேண்டியது என்ற கருத்துமுண்டு! ஒருபுறம், புலம்பெயர்ந்த சாதாரண பொது மக்களும், மாணவ சமுதாயத்தைச் சேர்ந்த சிலரும், இதனை உணர்ச்சி ரீதியாகப் பார்த்து தமது ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும், ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். மறுபுறம், புலிகளை வைத்துத் திரவியம் தேடியவர்கள், சமூகத்தில் பிரபல்யமாக இருந்தோர், தங்கள் பிழைப்புக்கு பங்கம் ஏற்பட்டமை குறித்து தமது ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும், ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறார்கள்.

**நோக்கம் 2:** இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதனால், அவர்களின் உறவுகளும் அப்பாதிப்புகளை பிரச்சாரங்கள் மூலமாகக் கேள்வியுற்றோரும் தங்களது சோகத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்துதல். அத்துடன், அதற்கு காரணமான மகிந்த ராஜபக்சா, மற்றும் அப்போரில் ஈடுபட்டோரை போர்க் குற்ற விசாரணகளுக்கு உட்படுத்தல்.

**கருத்து:** பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் இழப்பு தவிர்த்திருக்க வேண்டிய மிகவும் துன்பகரமான நிகழ்வு! ஆனால், அத்தகைய பல்லாயிரக்கணக்கானோரின் அழிவு நிச்சயம் எனத் தெரிந்தும் தமக்குக் கேடயமாகப் பயன்படுத்தி முள்ளிவாய்க்கால் வரை விரட்டிக் கொண்டு சென்ற புலிகளுக்கு எதிராகவுமல்லவா ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியிருக்க வேண்டும்? மாறாக, அநத ஆர்ப்பாட்டங்களில், புலிக்கொடிகளைப் பிடித்தமையும், "பிரபாகரன் வாழ்க" என்றும், "பிரபாகரன் எங்கள் தலைவர்" என்றும் கத்தப்பட்ட மிலேச்சைத்தனமான கோஷங்களும், அந்த ஆர்பாட்டங்களின் தார்மீகத் தன்மையை முற்றாக மழுங்கடித்து விட்டன. அவை, செத்துப் போன புலிகளுக்கு உயிர் கொடுத்து, தங்கள் பிழைப்பைத் தொடரும் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தவர்களின் நோக்கத்தை தோலுரித்துக் காட்டிவிட்டது. அத்துடன், புலிகள் இன்னமும் முற்றாக முறியடிக்கப்படவில்லை, எனவே தமிழர் பிரதேசங்களில் இராணுவ இறுக்கமும், சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட புலிகளை தொடர்ந்தும் சிறையில் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்போரின் வாதத்திற்கு வலு சேர்ப்பதாயும் அமைந்துவிட்டது.

**நோக்கம் 3:** ஜனநாயக முறைமைகளை மறுக்கும் மகிந்த ராஜபக்சாவிற்கு ஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தில் பேசும் உரிமையை அளிக்கக் கூடாது.

**கருத்து:** ஜனநாயகத்தை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்களே, ஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்களின் ஜனநாயக உரிமையை ஆர்ப்பாட்டங்கள் மூலம் நிராகரிப்பது எப்படி ஏற்புடைய ஜனநாயக முறைமையாகும்? வேண்டுமானால், மகிந்த ராஜபக்சாவிற்குக் கொடுக்கப்படும் ஜனநாயக உரிமை தமிழர் தரப்பிலும் ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டால், அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஜனநாயக முறைமையாகும்!

**நோக்கம் 4:** இத்தகைய ஆர்ப்பாட்டங்களின் மூலம், மகிந்த ராசபக்சாவின் வலுவைக் குறைப்பது? அல்லது, அவை இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் அல்லுறும் மக்கள் வாழ்வு வளம்பெற வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான அழுத்தங்களாக ஆக்குவது.

**கருத்து:** மேற்படி நோக்கத்துக்கு மாறாக, இந்த ஆர்ப்பாட்டங்களின் பின்னர், சிங்கள மக்கள் மத்தியில் மகிந்த ராஜபக்சாவிற்கான ஆதரவு மேலும் பலமாகி விட்டது? எதிர்க்கட்சியினரின் ஆதரவு மேலும் பலவீனமாகி விட்டது? தமிழர்களுக்கு மேலும் பாதகங்கள் விளைவிக்கக் கூடியதாக, சிங்கள மக்களின் மத்தியிலுள்ள பேரினவாதிகளின் குரல்களுக்கும் கரங்களுக்கும் வலு சேர்ந்து விட்டது!

வெறுப்பு, ஆத்திரம், பழிக்குப் பழி, தன்நலம், துவேஷம் ஆகிய உணர்வுகளால் உந்தப்பட்ட, அறிவுபூர்வமற்ற தூரநோக்கற்ற செயற்பாடுகள் மக்களுக்கு எதுவித பயன்களையும் அளிக்காது என்பதைத் புலம்பெயர்ந்தோரில் பலர் தெரிந்து கொள்ளத் தயாரில்லை! அடுத்து என்ன என்பதில் தீர்க்கமான சிந்தனைத் தெளிவும் இல்லை! [illegible] போக்கு அரசியலாலும் செயற்பாடுகளாலும் மக்கள் சக்தி மறுபடியும், மறுபடியும் வீணடிக்கப்படுகிறது விரயமாக்கப்படுகிறது! இது எதிர்மறை விளைவுகளுக்கே இட்டுச் செல்கிறது என்பது தமிழர்களின் சோக வரலாறு!

*க.கருணாகரன்.* *பண்டத்தரிப்பு*

**ஆன்மீகச் சொற்பொழிவாளர் சுகி சிவம் மீது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் சிலர் கோபமாக இருக்கிறார்கள் என ஒரு நண்பர் சொன்னார். என்ன நடந்தது என்று கூறுவீர்களா ?**

சமீபத்தில் சுகி சிவம் ஒரு சொற்பொழிவில், இலங்கையில் வாழ்கின்ற சராசரித் தமிழ்மக்களின் அவலங்களை மிகுந்த வேதனையுடன் குறிப்பிட்டு, "வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வீரவசனங்கள் பேசுகிறார்கள்? ஆனால், குடியிருப்புகள் இல்லாது அவஸ்தைப்படும் தம் இன மக்களுக்கு, தாங்கள் விட்டுவிட்டு வந்த கிராமங்களிலிருக்கும் தமது பழுதடைந்த வீடுகளை திருத்தி அவர்கள் வாழக் கொடுக்கத் தயாராக இல்லை" என்று சுட்டிக் காட்டிப் பேசிவிட்டார். அதுதான், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் அவரது ஆன்மீகச் சொற்பொழிவுகளை "ஆகா! எவ்வளவு அருமையானவை? கருத்தாழம் மிக்கவை!" என்று போற்றிக் கேட்டவர்களுக்கு? அவர் "துரோகி" என்ற தூற்றுதலுக்கும், "இவர் யார் எங்களுக்குச் சொல்ல?" என்ற கோபத்துக்கும் ஆளாகிவிட்டார்! நடந்தது அவ்வளவுதான்!.

*சி.சதாசிவம்.* *மானிப்பாய்*

**இன்னமும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் ஒரு சாரார், "புலிகள் மீண்டும் இலங்கை அரசின் மீதான ஆயுதப் போருக்கான தயாரிப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்றும், "அதுதான் ஒரே வழி" என்றும் பிரச்சாரம் செய்கிறார்களாமே?**

பல ஆண்டுகளுக்கு முன்னர், தமிழக சட்டமன்றத்தில் 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்ட மசோதா' அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதை எதிர்த்த பழமைவாதிகளில் ஒருவர், "தேவதாசி முறை இந்தியப் பண்பாட்டின் ஒரு அங்கம், அதை ஒழிக்கக் கூடாது" என்று பேசினார். அந்த அவையிலிருந்த டாக்டர் முத்துலட்சுமி என்பவர், அதற்குப் பதில் கூறும் வகையில், "இத்தனை காலம் எங்கள் இனப் பெண்கள் தேவதாசிகளாக இருந்தார்கள். இனிமேல் உங்கள் வீட்டுப் பெண்கள் தேவதாசிகளாக இருந்து இந்திய பண்பாட்டைக் காக்கட்டும்" என்றார். வாயடைத்துப் போனார் அந்தப் பழமைவாதி!

ஏறத்தாழ முப்பது வருட ஆயுதப் போராட்டத்தில் தங்களின் பிள்ளைகளை, உறவுகளைப் பலிகொடுத்தோரும், ஏதுமற்ற ஏதிலிகளாக வாழ்வோரும், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும், இலங்கையிலும் இத்தகைய வீரவசனங்களைப் பேசியும் எழுதியும் சுகவாழ்வு வாழ்ந்து கொண்டிருப்போருக்கு "இதுவரை எங்கள் பிள்ளைகளும் உறவுகளும் போராளிகளாக இருந்தார்கள் இனிமேல், உங்கள் வீட்டுப் பிள்ளைகளும் உறவுகளும் போராளிகளாக இருந்து தமிழ் ஈழத் தாயகத்தைப் பெற்றுத் தரட்டும்!" என்று கூறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைஞர்களின் கைகள் கட்டப்பட வேண்டும் கொள்ளையர்களின் கால்களைத் தடுத்திட வேண்டும்

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் இடம் பெற்றவரும் தொடர் கொள்ளைச் சம்பவங்களும் அடுத்தடுத்து நடந்துள்ள கொலைகளும் யாழ்ப் பாண மக்களிடையே ஒரு வகை அச்சத்தையும் பல்வேறுபட்ட சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றன.

கொள்ளையர்கள் இரண்டு அல்லது மூன்று பேர்களாக திடீரென்று இரவு நேரங்களில் நுழைந்து வீட்டிலிருப்போரை வாள் அல்லது கத்தியை காட்டியோ அல்லது துப்பாக்கியை காட்டியோ வெருட்டி நகைகள் மற்றும் பணங்களை கொள்ளையாடிச் சென்றனர். சில இடங்களில் தாலிக் கொடிகள் அறுத்தெடுத்து அபகரித்து செல்லப் பட்டுள்ளன. ஒரு வீட்டில் கொள்ளையர்கள் வீட்டுக்காரர்களுக்கு கொலைப்பயமுறுத்தல் விடும் வகையாக அவ் வீட்டின் நாயை சுட்டுக் கொலை செய்து விட்டு அவ்வீட்டிலிருந்த பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இன்னொரு வீட்டில் அந்த வீட்டுக்காரர்களின் போட்டோ அல்பத்தைக்காட்டி அந்த போட்டோக்களில் அந்த வீட்டுப் பெண்கள் அணிந்திருந்த நகைகளைக்காட்டி அவற்றை தரும்படி வெருட்டி எடுத்துச்சென்றுள்ளனர். இதேவேளை சில இடங்களில் இவ்வாறான கொள்ளையர்களின் முயற்சிகள் மக்களால் முறியடிக்கப்பட்டும் உள்ளன.

ஆனாலும் கொள்ளையர்கள் ஆயுதங்களுடன் குழுவாக வருகிறார்கள். என்பதாலும் அந்தக் கொள்ளையர்கள் கொலை செய்யவும் தயங்க மாட்டார்கள். என்பதுவுமான அபிப்பிராயங்கள் மக்கள் மத்தியில் நிலவுவதனால் அந்தக் கொள்ளையர்களை சந்திக்கும் வேளை எதிர்ப்பதற்கு மக்கள் அஞ்சுகின்றனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவங்களையும் சங்கானையில் குருக்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையும் உரும்பிராயில் வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையும் சரசாலையில் கடத்தப்பட்ட ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டதையும், உரும்பிராயில் ஒருவர் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டதையும், அல்வாய் தெற்கில் ஒரு பெண் கடத்திச் செல்லப்பட்டதையும் குடத்தனையில் ஒரு இளைஞர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதையும் மக்கள் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தியே பார்க்கிறார்கள்.

இந்தக் கொள்ளை,களையும், கொலைகளையும் அரச படைகளைச் சேர்ந்தவர்களும், தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் புலிகளுமே இணைந்து செய்கிறார்கள் என்ற வகையான சந்தேகங்களும் மாற்றாக அரச படைகளின் துணையுடன் அரசாங்க சார்பு குழுக்களின் செயற்பாடுகளே இவை என்ற வகையாகவும் பொதுவான அபிப்பிராயங்கள் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றன.

சங்கானைக் குருக்களின் படுகொலையில் படைச் சிப்பாய் ஒருவர் தொடர்புபட்டிருப்பதாக யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி ஒப்புக்கொண்டதோடு அவர் அதற்காக பகிரங்க மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். அத்துடன் இவ்வாறான இராணுவச் சிப்பாய்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்டும் எனவும் எதிர் காலத்தில் இவ்வாறு நிகழாது செய்யப்படும். எனவும் பகிரங்கமாக உறுதியளித்தார். ஆனாலும் அவரது உறுதி நிறைவேற்றப்படுவதாக மக்கள் நம்பவில்லை. யாழ் படைகளின் தலைமை கட்டளை தளபதியின் கூற்று குற்றச் செயல்களில் அரச படைகளின் ஈடுபாட்டை உறுதிப்படுத்துகிறது என்பதாகவே மக்கள் புரிந்து கொள்கின்றனர்.

இந்த சமூக விரோத குற்றச் சம்பவங்களை தடுக்கவும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும் விரைந்து செயற்பட்டு பொது மக்கள் மத்தியில் அச்சமின்மையையும் அரசு மீதான நம்பிக்கையையும் நிலை நாட்ட வேண்டிய பொலிஸார் மக்களுக்கு எச்சரிக்கை வழங்குவதிலும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கோருவதிலுமே அக்கறை காட்டுவதாகத் தெரிகின்றது. இதனால் பொலிசாரும் இந்த மக்கள் விரோத செயல்களுக்கு மறை முகமாக உதவுவதாகவே பொதுவாக மக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்கும் புனர்வாழ்வுக்கும், வறுமை ஒழிப்புக்கும் பொறுப்பான அரச உயர் அதிகாரியாகிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் கொள்ளைகளுக்கு வேலையின்மையும், வறுமையுமே காரணம். என்னும் தொனியில் தமது ஆய்வுக் கருத்தை வெளியிட்டுள்ளார். ஆனால் தமது அதிகாரத்தையும் மக்கள் தொடர்பு வாய்ப்புக்களையும் உரிய முறையில் பிரயோகித்து இந்தக் கொள்ளைகளைத் தடுப்பதற்கான அரச நிர்வாக மற்றும் மக்கள் உறவு அமைப்புக்களை உரிய அரசு உயர்பதவியில் இருப்பவர்களுடன் பேசி ஏற்பாடுகள் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை.

யாழ் அரசாங்க அதிபர் அரச சிவில் நிர்வாக மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும் அரச படைகளின் உயர் அதிகாரிகளுடனும் இது விடயமாகக் கலந்துரையாடியிருப்பதாகத் தெரிகின்றது ஆனாலும் கூடிக் கதைத்ததற்கு அப்பால் ஆக்கபூர்வமாக காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ உயர்அதிகாரி, பொலிஸ் உயர்அதிகாரி மற்றும், சிவில் நிர்வாக உயர் அதிகாரி ஆகிய மூவரும் யாழ்ப்பாண மக்களுக்கு இந்தக் கொலைகள் கொள்ளைகள் தொடர்பான காரண காரிய விளக்கங்கள் சொல்லி கொள்ளையர்களையும் கொலைஞர்களையும் தடுக்கும் கடமையை பொதுமக்களின் சுமையாக ஆக்கப் பார்க்கிறார்கள். பொதுமக்கள் தங்கள் பணத்தையும் நகைகளையும் வங்கிகளில் வைத்துவிட்டு போலி நகைகளை அணியும்படி பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை கூறுகிறார்கள். நடந்து முடிந்த கொலைகளெல்லாம் வெறுமனே தனிப்பட்ட குரோதத்தினால் விளைந்த சம்பவங்களே என்று சப்பைக்கட்டு கட்டப் பார்க்கிறார்கள்: கொலை கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக யாரேனும் சந்தேகப்படும்படி இருந்தால் உடனடியாக மக்கள் பொலிஸாருக்கு தகவல் தரும்படி கேட்கிறார்கள். அதற்கு, முதலில் பொலிஸார் மீதும் அரசபடைகளின் மீதும் மக்களுக்கு நமபிக்கை ஏற்பட வேண்டுமே. தகவல் கொடுக்க நினைக்கும் எவரும் கூட பொலிஸுக்கோ அலது இராணுவத்துக்கோ தகவல் கொடுப்பதென்பது ஒளியத் தெரியாத கள்ளன் தலையாரி வீட்டில் ஒளிந்த கதையாகி விடுமோ என்றல்லவா அச்சப்படுகிறார்கள்.

இதற்கு மாறாக இந்த உயர் அதிகாரிகள் தங்கள் கடமையை உரியமுறையில் மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு பாதுகாப்பு உணர்வையும் அரசு நிர்வாக அமைப்புக்கள் மீதான நம்பிக்கையையும் உருவாக்க வேண்டும் நாட்டில் களவும் கடத்தலும் இல்லாத ஒரு நிலமையை உருவாக்க வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர். கூறுகிறார். அப்படிப்பட்ட ஒரு நிலையை வடக்கு கிழக்கில் உருவாக்க பாதுகாப்பு செயலாளர் எந்த அளவுக்கு அக்கறையுடன் செயற்படுகிறார் என்ற கேள்வி இங்குள்ள மக்களிடம் உள்ளது.

மறக்க வேண்டும் என்று நினைத்தாலும் கூட மறக்க முடியாத அளவுக்கு கொடூரங்கள் கடந்த யுத்த காலங்களில் நிறைந்திருந்தன. ஆனாலும் அவற்றையெல்லாம் மறந்து புதிய எதிர்காலத்தை நோக்கி நடைபோட வேண்டும் என மக்கள் எல்லாக் கஷ்டங்களின் மத்தியிலும் உறுதியோடு செயற்பட்டு வரும் இந்தக் காலகட்டத்தில் இப்படிப்பட்ட கொலைகளும், கொள்ளைகளும் மக்களின் நம்பிக்கைகளை சிதறடிப்பனவாகவே உள்ளமை கவலைக்குரியதொன்றாகும்.

பத்து பேருக்கு ஒரு படை வீரர் என இங்கிருந்தும் இங்கு நடைபெறும் கொலைகள் கொள்ளைகள் தடுக்கப்படவில்லையே என யாழ்ப்பாணப் பேராசிரியர் ஒருவர் கேள்வி எழுப்பியிருப்பது அரசு கருத்திற் கொள்ள வேண்டிய ஒன்றே.

நான் ஒரு சிங்களவன், நான் ஒரு தமிழன் என நினைக்கும் நிலைமையை மாற்றி நாம் ஒவ்வொருவரும் இலங்கையரே என நினைக்கும் நிலையை தாம் ஆக்கப் போவதாக மாண்பமிகு ஜனாதிபதி அவர்கள் சூழுரைத்திருக்கிறார். யாழ்ப்பாணத்து ஒவ்வொரு குடிமகனும் தானும் இலங்கையனே என மனப்பூர்வமாக உணர்வு பெறும் நிலையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆவன செய்ய வேண்டியுள்ளது. அதில் இன்று மிகப்பிரதானமானது இந்தக் கொலைகளையும் கொள்ளைகளையும் தடுத்து நிறுத்துவதிலும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை எந்தவித தயக்கமுமின்றி பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதிலும் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொலிஸுக்கும் இராணுவத்துக்கும் பொறுப்பான அமைச்சராகிய ஜனாதிபதி விரைந்து செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்க்கையாகும்.

யுத்தமுடிவின் பின்னர் ஏற்பட்ட ஜனநாயகம், அச்சமற்ற நிம்மதி, அரசியலில் ஏற்பட்டு வரும் சுறுசுறுப்புக்கள், பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் இப்பொழுது தொடராக நாள்தோறும் நடைபெற்று வரும் கொலைகளால் கொள்ளைகளால் பாதிக்கப்பட்டு விடுமோ என்பதே இங்குள்ள சமூக அக்கறை கொண்டவர்கள் மத்தியில் நிலவும் விசனமாகும். பாதுகாப்பு உணர்வ இல்லாவிடின் புனர்வாழ்வும் புனரமைப்பும் முன்னேற்றமும் கானல் நீராகி விடும்

> **பொதுமக்கள் தங்கள் பணத்தையும் நகைகளையும் வங்கிகளில் வைத்துவிட்டு போலி நகைகளை அணியும்படி பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை கூறுகிறார்கள். நடந்து முடிந்த கொலைகளெல்லாம் வெறுமனே தனிப்பட்ட குரோதத்தினால் விளைந்த சம்பவங்களே என்று சப்பைக்கட்டு கட்டப் பார்க்கிறார்கள்: கொலை கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக யாரேனும் சந்தேகப்படும்படி இருந்தால் உடனடியாக மக்கள் பொலிஸாருக்கு தகவல் தரும்படி கேட்கிறார்கள். அதற்கு முதலில் பொலிஸின் மீதும் அரச படைகளின் மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டுமே.**

# இலங்கையில் மக்களின் வாழ்வு ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும்

இலங்கையில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் என்பது தமிழ் மக்களினது, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தேசிய சமூகங்களான முஸ்லிம்கள் மலைய மக்களின் உரிமைகளை உள்ளடக்கியதே இலங்கையின் சமூக அரசியல் வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவதில் அடிநாதமாக இருக்கப் போவதும் இதுவாகும்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான திருப்திகரமான தீர்வு காணாமல் பொருளாதார அபிவிருத்திப் பாதையில் ஒரு அடியைத்தன்னும் முன்னெடுத்து வைக்க முடியாது

இந்த அருவரிப்பாடம் விளங்காதவர்கள் பலர் அரசியல் அரங்கில் பலம் மிக்கவர்களாக இருப்பதால்தான் நாடு முன்னோக்கி செல்வதில் மூச்சுத் திணறுகின்றது.

அபிவிருத்தியும், மக்களின் வாழ்வு ஜனநாயக மயப்படுத்தப்படுவதும் மனித உடலில் இதயமும் மூளையும் போன்றவை இவை ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியவை

ஜனநாயகம் என்னும் போது அது பல்வேறு தர நிலை குணம் சார்ந்த தன்மைகளை கொண்டது தனி மனிதனின் ஜனநாயக உரிமை ஒரு நாட்டின் மக்களின் ஜனநாயக உரிமை வெவ்வேறு சமூகங்களிடையே ஜனநாயகம் என விரிந்து பரந்து செல்லும்.

அரசுகள் மக்களுக்காகவே தவிர அரசுகள் அரசுகளுக்காக அல்ல.

மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப் படுத்தத் தவறும் அரசுகள் காலாவதியானவை இவை வரலாற்றில் அற்று ஒளிந்து போய்விடும்.

எனவே இலங்கையில் தாம் சமமாக நடத்தப்பட வேண்டும் தமது அரசியல் உரிமைகள் உறுதிப் படுத்தப்பட வேண்டும் என்று தமிழர்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாக குரலெழுப்பியும் போராடியும் வந்திருக்கிறார்கள். இந்த சமூக நீதிக்கான குரல் ஆட்சியாளர்களால் செவி மடுக்கப்பட வேண்டும்.

இந்தியாவும் உலகநாடுகள் பலவும் இலங்கை மக்களின் நலன் விரும்பிகளும் இதனையே வலியுறுத்தி வருகின்றார்கள் ஒரு சமூகம் என்ற வகையில் தமது உரிமைகளுக்காக தமிழ் மக்கள் சிந்திய ரத்தம் கொஞசநஞ்சமல்ல ஜனநாயகத்திற்கு விரோதமான தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய பாசிசப்போக்கு தமிழர்களின் போராட்டத்தை பலவீனப்படுத்தியதென்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

அதற்காக தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இல்லை என்றில்லை. பிற சமூகங்கள் மீது வெறுப்பை உமிழும் கடுந்தேசியப் போக்கை நாம் எற்றுக்கொள்ள முடியாது அதனை ஈவிரக்கமின்றி எதிர்க்க வேண்டும்.

அதேபோல் பேரினவாத அகங்கார மமதையையும் நாம் சகித்துக்கொள்ள முடியாது. நாம் அமைதியான முறையில் அண்ணல் காந்தி காட்டிய வழியில் அணிதிரண்டு எமது அபிலாஷைகளை வலியுறுத்த வேண்டும். அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையின் அரசியல் முறைமையில் தமிழ் மக்களினதும் மலையக முஸ்லிம் மக்களினதும் மறுக்க முடியாத பங்கை வென்றெடுக்க பாடுபட வேண்டும்.

அரசியல் சமூகங்கள் என்ற வகையில் சிங்கள தமிழ் மலையக மக்களினது சமத்துவமான வாழ்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நாட்டின் விமோசனம் இதிலேதான் தங்கிநிற்கின்றது.

- இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமையை பறித்தல்
- தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம்.
- தனிச்சிங்களச் சட்டம்

போன்றனவே விபரீதங்களை நோக்கி இட்டுச் சென்றன. அடுத்த காலகட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் பொலிஸ் ஆட்சி, இராணுவமயமாககல் மூலம் சுதந்திரம் இல்லை என்பது உணர்த்தப்பட்டது.

1977, 1981, 1983 இனவன்முறைகளும் இன தனித்துவத்தை உறுதிப்படுத்தும் அரசியல் முறைமையை வலியுறுத்தின.

எதார்த்தங்களிலிருந்துதான் இன தனித்துவத் திற்கான குரல்கள் வலுவடைந்தன அதில் தவறேதும் காணமுடியாது.

இன்று மீண்டும் பேரினவாத வகைப்பட்ட பொலிஸ் ஆட்சி இன மத ரீதியான ஆக்கிரமிப்பு இராணுவமயம் என்பன நிலைபெற்றுவிடுமோ என்ற பீதி தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இந்தப் பதட்ட நிலை தணிக்கப் பட வேண்டும்.

யுத்தத்தில சிதைவடைந்த வடக்கு கிழக்கின் வாழ்வும் வளமும் மீள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

சமூகங்களிடையே சமத்துவமான நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும். தெருவிலும் வீட்டிலும் தமக்கு சுதந்திரம் இருக்கிறது தாம் மரியாதையாகவும் கௌரவமாகவும் நடாத்தப்படுகின்றோம் என்று உணர்வதற்கான நிலை எற்படுத்தப்பட வேண்டும்.

அன்றாடம் கொலையும் கொள்ளையும் ஆட்கடத்தலும் என்ற நிலை நீங்க வேண்டும்

ஊடகங்களில் நாளாந்தம் இத்தகைய செய்திகளை அறியும் மக்கள் ஒருவித மனநோய்க்கு ஆளாகிறார்கள் மனம் பேதலித்துப்போகிறார்கள்

இது சமூக பொருளாதார அபிவிருத்திக்கு விரோதமான நிலையாகும்.

போதி மாதவனை போற்றும் மக்கள் பெருவாரியாக வாழும் நாட்டில் இத்தகைய ஈனச்செயல்கள் அடாதவை பொருத்தமற்றவை எனவே இங்கு மாற்றம் வேண்டும்.

அமைதியும் சாந்தியும் கருணையும் நிலவும் பொலிவுபெறும் வாழ்வு வேண்டும்.

இன சமூகங்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் நாம் கணிசமான தூரம் முன் செல்ல முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த நண்பர்களே! ஆற்றல் மிகு தோழர்களே!

அ.வரதராஜப்பெருமாள்

உங்கள் அனைவருக்கும் எனது மனம் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களையும் பொங்கல் நல்வாழ்த்துக்களையம் ஒரு சேர தெரிவித்துக் கொள்கிறேன். எமது வாழ்வில் கடந்து போயுள்ள 2010 ம் ஆண்டு அதற்கு முந்திய ஆண்டுகளைவிட பல நல்ல விடயங்களை நமக்கு நடத்திப் போயிருக்கிறது. இந்த 2011ம் ஆண்டானது அவற்றையும் விட மேலும் பல நல்ல விடயங்களை நமக்குத் தரும் ஆண்டாக அமைய வேண்டுமென மனதார விரும்புவோமாக!

நமக்கு கடந்த ஆண்டில் என்னவெல்லாம் கிடைக்கவில்லை என்ற கவலையை விட்டு என்னென்ன நல்ல விடயங்கள் கிடைத்தன என்பதில் திருப்தியடைவோம். இந்த ஆண்டில் நமக்கு எவையெவை கிடைக்கமாட்டா என்பதைத் தெரிந்திருந்தும் அவற்றுக்காக ஏங்கி நம்பிக்கை யீனங்களோடு வாழ்வதை - செயற்படுவதை விட்டு எவையெவை நல்லவையாக நடப்பதற்கு - கிடைப்பதற்கு சாதகங்கள் உள்ளன அவற்றை எமக்கு நிச்சயமாகக் கிடைக்கும் வகைக்காக வேண்டி எவ்வெவற்றை நாம் செய்ய வேண்டும் என்பதில் நாம் எமது முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் - எமது உழைப்பைச் செலுத்துதல் வேண்டும்.

இந்த அணுகுமுறை எவ்வாறு ஒவ்வொருவரதும் தனிப்பட்ட நலன் சார்ந்த விடயங்களுக்கும் பொருந்துமோ அதேபோலவே எமது சமுதாய ரீதியான பொதுநலன் சார்ந்த விடயங்களுக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன்.

உங்களுக்குத் தெரியும், 2008 ம் ஆண்டு எமது மண்ணில் நடந்து கொண்டிருந்த யுத்தப் பேரழிவுகள் - சீரழிவுகள், அவலங்கள், ஓலங்கள்: யுத்தப் பைத்தியக்காரர்களின் அகங்காரம் பிடித்த கொலைகார முழக்கங்கள்; யுத்தப் பிரபுக்களின் பயங்கரவாத வெறிபிடித்த அரக்கத்தனமான செயற்பாடுகள் என்பவையெல்லாம் எப்போது முடிவுக்கு வரும் என ஏங்கியிருந்தோம். அவை 2009 ம் ஆண்டோடு முடிவுக்கு வந்தன.

2009 ம் ஆண்டின் இறுதி மாதங்களில் எம்மை நிறைத்திருந்த ஏக்கங்களை மீள நினைத்துப் பாருங்கள்:-

- யுத்தத்தின் முடிவில் அகதிகளாக முள்ளுவேலி முகாம்களுக்குள் மூன்று லட்சம் வன்னித் தமிழர்களின் எதிர்காலம் என்னவாகப் போகிறதோ?
- இந்த மூன்று லட்சம் தமிழர்களும் வவுனியாவில் அவர்களுக்காக உருவாக்கப்பட்ட அகதிமுகாம்களிலேயே பல ஆண்டுகளுக்கு வைக்கப்படப் போகின்றார்களோ?
- யுத்தத்தின் வெற்றிக் களிப்பில் மிதந்து கொண்டிருக்கும் ராஜபக்ஷ அரசாங்கம் முல்லைத்தீவு மாவட்டத்தின் பகுதிகளுக்கு தமிழர்களை குடியேற விடாமல் வைத்திருந்து அங்கெல்லாம் சிங்களவர்களைத் திட்டமிட்டு குடியேற்றப் போகிறதோ? என்றெல்லாம் நாம் ஏங்கியிருந்த காலம் அல்லவா!

அந்த மாதங்களில் அப்படியான ஏக்கங்களைத் தானே உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் கொண்டிருந்தார்கள். புலி ஆதரவு அரசியற் பிரதிநிதிகளும் புலிப் புத்திஜீவிகளும் புலிப் பத்திரிகைகளும் அப்படித் தானே தமிழர்களுக்கு பயம் காட்டி பயமுறுத்தி தங்களது வியாபாரங்களை செய்து கொண்டார்கள்; தங்களது அரசியல் லாபங்களைப் பெற்றுக் கொண்டன.

ஆனால் 2010 ம் ஆண்டில் அகதி முகாம்களில் அடைக்கப்படிருந்த வன்னி மக்களில் தொண்ணூறு சதவீதத்துக்கும் மேற்பட்டோர் அவரவரது கிராமங்களுக்கும் சொந்த இருப்பிடங்களுக்கும் மீண்டும் சென்று குடியேறி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலய எல்லைகள் உருவாக்கப்பட்டு விரிவாக்கப்பட்டதன் விளைவாக சுமார் ஒரு லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளாக அகதி முகாம்களில் முடக்கப்பட்ட சீவியத்தையே நடத்த வேண்டியவர்களானார்கள். இவர்களில் சுமார் 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மேலைத்தேய நாடுகளுக்குப் போய்விட்டார்கள். ஏனைய 75 ஆயிரம் பேர் அதாவது சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் அகதி முகாம்களில் தொடர்ந்து வாழ்ந்தார்கள். 2010ம் ஆண்டின் இறுதி மாதங்கள் அவர்கள் அவர்களது கிராமங்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்று குடியேறுவது தொடர்பான சில நம்பிக்கை ஒளிகளைக் காட்டியுள்ளன. காங்கேசன் துறை வீதிக்கு வலப் பக்கமாக உள்ள கிராமங்களில் மக்கள் மீண்டும் குடியேறுவதற்கான வழிகள் படிப்படியாக திறக்கப் படுகின்றன. பலாலி வீதியோடு இருந்த வசாவிளான் மகாவித்தியாலயம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. பச்சிலைப் பள்ளி நிர்வாகப் பிரிவில் ஒரு சில கிராமங்களைத் தவிர ஏனைய இடங்களிலெல்லாம் மக்கள் தத்தம் கிராமங்களில் குடியேறிவிட்டார்கள்.

1996 ம் ஆண்டுக்குப் பின்னரிருந்து தொடர்ந்து நடைபெற்ற யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களில் இருந்து மக்கள் அகதிகளாக கடந்த 14 ஆண்டுகளாக அகதி வாழ்க்கையை எந்தவொரு இடமும் உறுதியாக இல்லாமல் இடங்கள் மாறி மாறி ஓடி அந்தரமான வாழ்க்கை வாழ வேண்டியிருந்தது. யுத்தம் முடிந்ததன் பின்னரும் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேற அரச இராணுவம் அனுமதிக்கவில்லை. அது பற்றிக் கேட்ட நேரமெல்லாம் இராணுவ அதிகாரிகள் ஒன்றில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இல்லையென்றார்கள், அந்தக் காரணம் இல்லையென்றால் இன்னமும் அந்த இடங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை என்றார்கள். ஆனால் 2010 ம் ஆண்டின் இறுதியில் இருந்து பார்த்தோமாயேனால் அந்த வகையாக அவலப்பட்ட மக்களில் இன்னமும் ஒரு மிகச் சில குறிப்பிட்ட சிறிய கிராமங்களை தவிர ஏனைய இடங்களிலெல்லாம் அரசு மக்களை மீண்டும் குடியேறுவதற்கான வகைகளைச் செய்துள்ளது.

எனவே, வன்னியில் 3 இலட்சம் அகதிகள் என்ற நிலைமாறி இப்போது 30 ஆயிரம் பேருக்கும் குறைவானவர்களே என்னும் நிலை ஆகியிருப்பது கண்டு திருப்தி கொள்வோம். எஞ்சி இருப்போரும் அவரவரது கிராமங்களுக்கு மீண்டும் சென்று விரைவில் குடியேறி விடுவார்கள் என்று நம்பிக்கை கொள்வோமாக!

கிழக்கு மாகாணத்தில் இலட்சக் கணக்கானவர்கள் அகதிகளானார்கள் என்ற நிலை போய் இன்று திருகோணமலை மாவட்டத்தில் அதுவும் சம்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 5 ஆயிரம் பேர் மட்டுமே எதிர்காலம் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இன்னும் ஒரு குறுகிய காலத்துள் விடிவு பிறக்கும் என மனச்சாந்தி கொள்வோம்.

யாழ்ப்பாணத்துக்குள்ளே இன்னமும் அகதிகளாக இருப்பவர்கள் படிப்படியாக குடியேறி அனைவரும் தத்தம் இடங்களுக்கு மீளச் சென்று விடுவார்கள் எனத் திருப்தி கொள்வோம்.

நாம் நேற்றையை விட இன்று நல்ல நிலையில் உள்ளோம் என மனத்திருப்தி கொள்வோம். இவ்வாறான மனத் திருப்தி எமது மக்களுக்கான நாளைய நம்பிக்கைகளைத் தரும் வகையில் நாமும் நம்பிக்கைகளோடு செயற்படுவோமாக!

இன்னமும் அகதிகளாக முகாம்களில் அடைபட்டு அரச உதவிகளுக்காக எமது தமிழின மக்கள் கையேந்தி நிற்கும் நிலை இந்தப் புதிய ஆண்டில் முடிவுக்கு வர வேண்டும் என்பதில் உறுதியும் நம்பிக்கையும் கொள்வோம்.

நாம் நேற்றையை விட இன்று முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்ற நம்பிக்கையை நாம் எமது சமூகத்துக்கு - மக்களுக்கு கொடுக்க வேண்டிய கடமைப்பாட்டில் இருக்கிறோம் என்பதை தமிழ்ச் சமூகத்தின் எந்த பொறுப்புணர்வுள்ள அரசியற் தலைவரும் சமூகத் தலைவரும் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஒரு சமூகத்தின் வாழ்வு தீப்பற்றி எரிய அதில் தாங்கள், தங்களுக்குக் கிடைத்த கொள்ளிகளைப் பிடுங்கி தமது வாழ்வை வளம்படுத்திக் கொள்வதற்கு ஒரு சமூக விரோத வியாபாரக் கூட்டம் எங்கும் இருக்கத்தான் செய்யும். அவர்கள் தொடர்பாக அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், மக்கள் மத்தியில் தெளிவான விழிப்புணர்வை ஏற்படுத்தி எச்சரிக்கையாக இருக்க வழி செய்ய வேண்டும்.

மாறாக அவ்வாறான சமூகவிரோத வியாபாரக் கூட்டத்தோடு சேர்ந்து தமது சுயநலன்களை தக்க வைத்துக் கொள்ளவும் மேலும் சுலபமாக தமது நலன்களை பெருக்கிக் கொள்ளும் வகையாகச் செயற்படும் அரசியல் சமூகப் பிரமுகர்கள் அந்த மோசமான சமூக விரோத வியாபாரிகளை விடவும் மோசமான சமூக விரோதிகளாவர் என்பதை நாம் புரிந்து மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

நான் உங்களை முந்திய ஆண்டை விட கடந்த ஆண்டு நன்றாகவே போனது என்று சொல்வதையோ! கடந்த ஆண்டை விட பிறந்துள்ள ஆண்டு நன்றாகவே இருக்கும் என்று நம்பிக்கை கொள்ளும்படி கூறுவதையோ நீங்கள் எல்லாமே கடந்த ஆண்டுகளில் நன்றாகவே நடந்தன என்று நான் கூறுவதாகவோ அல்லது எல்லாமே இப்போது பிறந்துள்ள ஆண்டில் நல்லதாக மட்டுமே நடக்கும் என்று உங்களுக்கு நான் சுடலை ஞானம் போதிப்பதாகவோ தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

யுத்தத்தால் அவலப்பட்டு அகதிகளாகி மீண்டும் தத்தமது இடங்களில் குடியேறியுள்ள மக்கள் இன்னமும் அந்தரித்த வகையான நிலையிலேயே வாழ்கிறார்கள். அவர்களுக்கான அரச உதவி போதியதாய் இல்லை. தங்களைத் தேடி வந்து யாராவது ஏதாவது தந்துதவ மாட்டார்களா என்னும் கையேந்திய மனோநிலையிலேயே மக்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தவரும் தங்களது சுயமான பொருளாதார வாழ்வை மீட்டெடுத்து கௌரவமாக வாழ்வதற்காகக் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அச்சங்களற்றும் அடிப்படையான மனித உரிமைகளோடு மரியாதையாகவும் வாழ்வதற்கு பாதுகாப்பான நீதியான சட்ட மற்றும் சமூகச் சூழல் எப்போது வரும் என ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் தற்போது தம்மைச் சூழ்ந்துள்ள அரசியல் பற்றியென்ன அவர்களைச் சூழ்ந்து நிற்கும் அடாவடித்தனங்கள், அவர்களைச் சுரண்டிக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் அயோக்கியத்தனங்கள் பற்றிக் கூட அவர்கள் ஒரு சில நிமிட நேரங்களைச் செலவளித்து, காது கொடுத்துக் கேட்கவோ, சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளவோ தயாராக இல்லை. ஏனெனில் சொந்த மண்ணில் வாழும் தமிழர்களின் வாழ்நிலை அவ்வளவு இக்கட்டானதாக உள்ளது.

எதிர்காலத்தில் இலங்கையில் -

- எங்கும் எதிலும் எவர் மத்தியிலும் - ஜனநாயகம் தலைசிறந்து வாழும் ஒரு கலாச்சாரமாக ஆக வேண்டும்
- எங்கும் ஒவ்வொருவரதும் அடிப்படையான அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளும் வளர்ச்சியடைந்த நாகரீகங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து தனிமனித உரிமைகளும் சட்ட ஒழுங்குகளாலும் நீதியமைப்பின் கட்டமைப்பாலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்
- தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களில் உயர்ந்தபட்ச மாநில சுயாட்சி அமைப்பைக் கொண்ட ஆட்சி அமைப்பு முறைமை செயற்பட வேண்டும்.
- யுத்தத்தால் சீரழிந்து கிடக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத வகையில் அபிவிருத்தியடைவதற்கான முன்னேற்றங்களை அடைய வேண்டும்.

இந்த விருப்பங்களோடு பிறந்துள்ள ஆண்டின் எதிர்வரும் மாதங்களை நம்பிக்கைகளோடும் உறுதிகளோடும் சந்திப்போம்.

இப்படிக்கு
உங்கள் நண்பன் - தோழன்
அ. வரதராஜப்பெருமாள்

## நடுநிலை பத்திரிகை பிரச்சாரத்தில் ஈடுபடக் கூடாது

**டான் ரிவியின் 10வது ஆண்டுவிழாவில் முன்னள் முதல்வர் அ.வரதராஜப்பெருமாள்** (1ம் பக்கத் தொடர்ச்சி)


ஒரு கட்சியினுடைய பத்திரிகை பிரச்சாரத்தை மேற்கொள்வது தவறில்லை. ஆனால் ஒரு நடு நிலை பத்திரிகை அவ்வாறு செயற்படக் கூடாது. அரசியல் கருத்தொன்றுக்கு ஆதரவாயிருப்பது கூட தவறில்லை ஆனால் அதற்காக பிரச்சாரம் செய்கின்ற பணியை ஒரு நடு நிலை பத்திரிகை மேற்கொள்ளக் கூடாது எனவும் தெரிவித்தார்.

மேலும், தனதுரையில் இப்போதும் கூட முழுமையானதொரு ஜனநாயகச் சூழல் உருவாகிவிட்டதென கூறிவிட முடியாது. ஆனால் மக்களை அச்சமூட்டுவதாலோ, நம்பிக்கை இழக்கச் செய்வதாலோ பயன் ஒன்றும் விளையப் போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

இங்கு மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்கு ஊடகங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும் வேலையற்ற கான உதவிகளை பெற்றிருந்தும் வீட்டுத்திட்டங்களை நிறைவேற்ற முடியாதுள்ள மக்களின் பிரச்சினைகளை அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். இங்கு இடம்பெறுகின்ற கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து எழுதி குற்றமிழைத்தவர்களை கண்டறிய உதவ வேண்டும் எனவும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், தமிழரசு கட்சி பிரமுகரும் முன்னாள் மாநகர ஆணையாளருமான சி.வி.கே சிவஞானம், ஈபிடிபி யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், சட்டத்தரணி ரங்கன் ஆகியோரும் இந்த விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துக் களையும், கருத்துக்களையும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் முகுந்தன்
ஆறுமுகம் முருகநேசன்
மூளாய்

எமது அரசியல் இராணுவ பயிற்றுவிப் பாளராக காத்திரமான பங்களிப்பை செய்த தோழர் முகுந்தன் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்துவைத்து சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்



தோழர் ஜோர்ச்
தம்பிராசா தவராஜா
திருகோணமலை

வடக்கு கிழக்கு மாகாண சபை திருகோணமலையில் ஸ்தாபிக்கப் படுவதற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியவர். மாகாண சபையின் உபதவி சாளருமாவார். புலிகள் மறைந்திருந்து நடாத்திய தாக்குதலில் பலியானார்.



தோழர் ரவி
சிற்சபேசன்
கல்வியங்காடு



தோழர் கோபன்
ம.நவநீதம்பிள்ளை
கொக்கட்டிச்சோலை



தோழர் சின்னசிவா
கோ.சிவானந்தம்
பெரியகல்லாறு



தோழர் தர்மன்
த.குமாநாதன்
நெடுந்தீவு



தோழர் குரு
ப.ஞானச்சந்திரன்
மட்டுவில்



தோழர் வில்லியம்
சிவசுப்பிரமணியம்
கல்வயல்

எம்மால் திரட்ட முடிந்த, ஜனவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்களின் பெயர் விபரங்களை இங்கு பிரசுரித்துள்ளோம். இங்கு தவற விடப்பட்ட தோழர்களின் விபரங்களை அனுப்பிவைப்பதுடன் இங்கு வெளியிடப்பட்டுள்ள அட்டவணையை பூரணப்படுத்துவதற்கும் உதவுமாறு தோழர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள், தோழர்களை கேட்டுக் கொள்கின்றோம். தோழர்களது நிழற்படங்கள் இருப்பின் அவற்றின் பிரதிகளையும் எமக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## 53 வது பிறந்த நாள் நினைவு தினம்

24.12.2010

தேச விடுதலையை நேசித்து
மானிட தர்மத்தை
மதித்து நின்றதால்
ஏக பிரதிநிதித்துவத்தின்
எதிரியானாய்
இடர்களின் நடுவேயும்
தஞ்சமென மண்டியிடாது
தலைநிமிர்ந்து நின்று
வீரகாவியமானாய்
காற்றில் கலந்த போதும்
சாய்ந்துவிட்ட வல்லாதிக்கம் — உன்
கருத்தின் வலிமையை
பறைசாற்றி நிற்கின்றது
இனி நிமிர்ந்தெழும்
நீ உயர்த்திப் பிடித்த மானிட தர்மம்



தோழர் றொபேட்
( தம்பிராசா சுபத்திரன் )

ஈ.பி.ஆர்.எல்.எவ் மத்திய குழு உறுப்பினர்
முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர்

# நினைவு கூருகின்றோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் தம் உயிரை அர்ப்பணித்த ஜனவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள். அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்களது பணியை நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துவோம்

| பெயர் | கட்.பெயர் | வசிப்பிடம் | இற.திகதி | காரணம் |
|---|---|---|---|---|
| ரவி | தேவன் | தம்பசிட்டி | 00.01.1989 | புலிகள் |
| இராசையா தனராஜ் | ரவி | கரடிப்போக்கு | 04.01.1990 | புலிகள் |
| பழனி ஞானசந்திரன் | குரு | மட்டுவில், | 04.01.1990 | புலிகள் |
| சிதம்பரம் செல்வரத்தினம் | சதீஸ் | கிளிநொச்சி | 04.01.1990 | புலிகள் |
| வேதரத்தினம் தவராசா | அலெக்ஸ் | சுன்னாகம் தெற்கு | 05.01.1990 | புலிகள் |
| வே. சோதிலிங்கம் | ரூபன் | வரணி கொடிகாமம் | 07.01.1990 | புலிகள் |
| சி. கமலநாதன் | சீனு | கச்சாய் கொடிகாமம் | 07.01.1990 | புலிகள் |
| நாகமணி | | சுன்னாகம் தெற்கு | 08.01.1990 | புலிகள் |
| கிருஸ்ணன் பாலசுப்பிரமணியம் | ராசா | வண்ணான்கேணி | 09.01.1990 | புலிகள் |
| சங்கரப்பிள்ளை கண்ணன் | ராம் | குடியிருப்பு வவுனியா | 09.01.1990 | புலிகள் |
| | காளி | அச்சுவேலி | 10.01.1990 | புலிகள் |
| இராமையா அரசர்ட்ணம் | | தா்மபுரம் | 13.01.1989 | புலிகள் |
| | பிள்ளையார் | கரவெட்டி மேற்கு | 20.01.1989 | புலிகள் |
| | றோபேட் | குருநகர் | 20.01.1989 | புலிகள் |
| தியாகு டெனிஸ் | ஜெஸி | நாவாந்துறை தெற்கு | 20.01.1990 | புலிகள் |
| முருகேசு வசந்தகுமார் | | மயிலிட்டி பலாலி | 20.01.1990 | புலிகள் |
| ஜோசப் ஜேயராஜா | | சுண்ணாகம் தெற்கு | 20.01.1990 | புலிகள் |
| சிங்கராசா கிருபராஜா | கிருபா | புங்குடுதீவு | 20.01.1990 | புலிகள் |
| | காந்தன் | ஊர்காவற்றுறை | 20.01.1990 | புலிகள் |
| | அலிஸ்ரன் | அல்லைப்பிட்டி | 20.01.1990 | புலிகள் |
| | பிரதாப் | | 22.01.1986 | புலிகள் |
| சே. ரொபின்சன் உதயகுமார் | ஜோன்சன் | குருநகர் | 22.01.1990 | புலிகள் |
| கந்தையா ஜெகஸ்வரன் | சிவா | பலாவி கிழக்கு | 23.01.1990 | புலிகள் |
| ஆறுமுகம் வரதன் | | ஆவரங்கால். | 23.01.1990 | புலிகள் |
| பொன்னுத்துரை கருணாகரன் | புஸ்பன் | பலாலி கிழக்கு | 23.01.1990 | புலிகள் |
| பொன்னுத்துரை பாஸ்க்கரன் | பாஸ் | பலாலி கிழக்கு | 23.01.1990 | புலிகள் |
| பொன்னுத்துரை மனோகரன் | மனோ | பலாலி கிழக்கு | 23.01.1990 | புலிகள் |
| வல்லிபுரம் யோகநாதன் | | பலாலி கிழக்கு | 24.01.1990 | புலிகள் |
| அச்சுதலிங்கம் யோகராசா | வசந்தன் | மயிலங்காடு | 25.01.1990 | புலிகள் |
| அச்சுதலிங்கம் தெய்வேந்திரன் | இந்திரன் | மயிலங்காடு | 25.01.1990 | புலிகள் |
| அருளப்பு யூதாகரன் | சாந்தன் | குருநகர் | 25.01.1990 | புலிகள் |
| ஆறுமுகம் முருகநேசன் | முகுந்தன் | மூளாய் தெற்கு | 21.01.1990 | புலிகள் |
| செபமாலை கிருபானந்தன் | கிரி | குருநகர் | 25.01.1990 | புலிகள் |
| சிற்சபேசன் | ரவி | கல்வியங்காடு | 21.01.1990 | புலிகள் |
| எஸ்.சிவசுப்பிரமணியம் | வில்லியம் | கல்வயல் சாவா | 25.01.1990 | புலிகள் |
| பசுபதி யோகநாதன் | லெனின் | வாட்-5 நெடுந்தீவு | 29.01.1989 | புலிகள் |
| தா்மலிங்கம் குமரநாதன் | தா்மன் | 05ம் வட், நெடுந்தீவு | 29.01.1989 | புலிகள் |
| சந்திரன் சாந்தகுணம் | | உடுப்பிட்டி வடக்கு | 31.01.1988 | புலிகள் |
| கந்தசாமி சிறிஸ்கந்தவேல் | சின்னவன் | இணுவில் | | புலிகள் |
| அ. ஜஸ்ரின் | தயான் | பலாலி வடக்கு | | புலிகள் |
| வீரசிங்கம் சிங்கன் | ஜுலி | தாண்டியடி | 12.01.1990 | |
| கதிர்காமத்தம்பி சிவஞானம் | குயில் | முதலைக்குடா | 12.01.1990 | |
| அருளம்பலம் ராகவன் | காளி | பெரியகல்லாறு 3 | 13.01.1990 | |
| செல்லத்தம்பி கணேசமூர்த்தி | கணேஸ் | பெரியகல்லாறு | 09.01:1990 | |
| ராஜன் | பாரதி | களுவாஞ்சிக்குடி 5 | 28.01.1989 | புலிகள் |
| எஸ்.பற்குணம் | பற்குணம் | மண்டூர் | 19.01.1987 | புலிகள் |
| | தாஸ் | அக்கரைப்பற்று | 11.01.1987 | |
| | தவராஜா | மட்டக்களப்பு | 15.01.1986 | புலிகள் |
| சா்வானந்தன் | ஆனந்தன் | வக்கெல்ல | 20.01.1989 | புலிகள் |
| வி.சபாரட்ணம் | அலெக்ஸ் | மகிழூர் | 26.01.1986 | எஸ்ரிஎவ் |
| கே.திருநாவுக்கரசு | அல்பேட் | ஆரையம்பதி - 02 | 04.01.1987 | புலிகள் |
| கணபதிப்பிள்ளை ஜெயசீலன் | ஜெயா | 3ம் பிரிவு மண்டூர் | 14.01.1987 | |
| ம.நவநீதம்பிள்ளை | கோபன் | கொக்கட்டிச்சோலை | 10.01.1991 | |
| | லோகு | துறைநீலாவணை | 19.01.1985 | எஸ்ரிஎவ் |
| இ.நேசதுரை | சுமன் | வக்கெல்ல | 20.01.1989 | புலிகள் |
| ரேரன்ஸ் | சுரேஸ் | மட்டக்களப்பு | 13.01.1987 | |
| | சின்னபாபு | காரைதீவு | 02.01.1988 | புலிகள் |
| கோவிந்தபிள்ளை சிவானந்தம் | சின்னசிவா | பெரியகல்லாறு 2 | 09.01.1990 | |
| எம்.ரஞ்சன் | விக்கி | ஆரையம்பதி - 02 | 04.01.1987 | புலிகள் |
| என்.பேரின்பம் | | மண்டூர் | 05.01.1987 | புலிகள் |
| வை.கிபுலர் | | களுவாஞ்சிக்குடி | 23.01.1987 | புலிகள் |
| கொலின் | கொலின் | லலிமதவு | 1990.01.23 | புலிகள் |
| | கபில் | முருங்கன் | 1990.01.23 | புலிகள் |
| செல்வராசா | கரன் | கும்புறுப்பிட்டி | 10.01.1990 | புலிகள் |
| ஜீவரட்ணம் | சுதா | ஈச்சலம்பத்தை | 10.01.1990 | புலிகள் |
| சண்முகராசா | சுமன் | ஈச்சலம்பத்தை | 10.01.1990 | புலிகள் |
| தம்பிராசா.தவராசா | ஜோச் | திருகோணமலை | 10.01.1990 | புலிகள் |
| நல்லரட்ணம் உதயகுமார் | தா்மன் | திருகோணமலை | 10.01.1990 | புலிகள் |
| | நடா | வவுனியா | 1990.01.23 | புலிகள் |
| சா்வானா | மதன் | மலையகம் | 1990.01.23 | புலிகள் |
| | ராம் | வவுனியா | 1990.01.09 | புலிகள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிப் பாடுவோம்?

தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்படும் என அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியதை தொடர்ந்து தமிழ் சமூகத்தின் மத்தியிலிருந்து இதற்கெதிரான கருத்துக்கள் பரவலாக வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை ஒரே நாடு என்ற அடிப்படையில் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே பாடப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையின் ஏகோபித்த ஆதரவு கிடைக்காமையால் இது குறித்து பின்னர் முடிவு செய்யலாம் என இந்த யோசனையை கொண்டுவந்த ஜனாதிபதியே தெரிவித்து விட்டார் என்பது தான் உண்மை.

எனினும் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டுமே பாடவேண்டும் என்னும் யோசனைக்கு பலத்த எதிர்ப்பு எதுவுமிருக்கவில்லை. எனவே மீண்டும் ஒரு தடவை இந்த யோசனை முன்வைக்கப்படாதென்றோ, தீர்மானமானமாக நிறைவேற்றப்பட முடியாதென்றோ கூறிவிட முடியாது. உலக நாடுகளில் ஒரே மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. "சுமார் 300 மொழிகள் பேசப்படும் இந்தியாவில் தேசிய கீதம் ஹிந்தியில் பாடப்படுகிறது" என தெரிவித்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ச இந்த யோசனைக்கு முழுமையான ஆதரவை தெரிவித்துள்ளார். வாசுதேவ நாணயக்கார இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அத்தவுட செனிவரட்ணா தமிழிலும் ஒரு சில வார்த்தைகளாவது உள்ளடக்கப்பட வேண்டும் என்று கருத்துக் கூறியுள்ளார். தள்ளிப் போடுமாறு கோரியுள்ளார் ராஜித சேனாரட்ணா. தேசிய மொழிகள் மற்றும் இன நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார காலம் காலமாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் மீது காட்டிவரும் ஈடுபாட்டை, அக்கறையை இந்த விடயத்திலும் காட்டியிருக்கிறார். ஆனால் தமிழ் மக்கள் அவர்களைப் போன்றவர்களுடைய கரங்களை பலப்படுத்த ஒருபோதும் முன்வருவதில்லை.



வாசுதேவ நாணயக்கார

அயல்நாடான இந்தியாவில் தேசிய கீதம் ஹிந்தி மொழியிலேயே பாடப்படுவதாக அமைச்சரவைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும் இந்தியாவில் மிகச் சிறுபான்மையினரால் பேசப்படும் வங்காள மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. சமஸ்கிருதத்திலும் சில வார்த்தைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிங்களமொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என அமைச்சரவை ஆராய முற்பட்டதை பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கண்டனம் செய்து தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து இலங்கையில் சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும் என அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான தகவல் தவறானது என ஜனாதிபதி செயலகத்தின் கொள்கை ஆய்வு மற்றும் தகவல்துறையின் பணிப்பாளர் லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவித்திருந்தார்.

தேசிய கீதம் பாடப்படுதல், அதற்குரிய மரியாதையை வழங்குதல் தேசியக் கொடியேற்றல் என்பவை தொடர்பாகவே அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட்டன. சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்பட வேண்டும் எனவோ அவ்வாறு அமைச்சரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது எனவோ வெளிவந்த தகவல்கள் உண்மைக்கு புறம்பானதாகும் என்று அவர் இந்து பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

ஆனால், கடந்த 26.12.2010 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பிரதமர் டி.எம்.ஜயரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்ட தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் சிங்களத்திலேயே தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் டி.எம் ஜயரத்தின இலங்கையில் 5 இனங்களும் 4 மதங்களும் உள்ளன. எல்லோரும் இலங்கையர்களே எனற சம உணர்வோடு எல்லா மக்களும் வாழும் சூழலையே எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தார்.

ஒவ்வொருவரும் தங்களுடைய மொழியை கலாச்சாரத்தை பின்பற்றுவதற்கான உரிமையுண்டு அதுவே ஜனாதிபதியின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். நாம் அனைவரும் ஆசியாவில் ஆச்சரியத்திற்குரிய நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமரின் கூற்றுக்கு மாறாக பிரதமரின் வருகையையொட்டி தேசிய கீதத்தை சிங்களத்தில் இசைப்பதற்கு மாணவிகள் பயிற்றுவிக்கப்பட்டு பாடவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அமைச்சர் ஒருவரின் பணிப்பின் பேரிலேயே தான் இந்த ஏற்பாடுகளை செய்தேன் என யாழ். அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

சிங்களத்தில் தேசிய கீதம் இசைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததால் தான் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் (54) சுடப்பட்டுள்ளார் என்ற வதந்தி நம்பப்படும் அளவிற்கு குடாநாட்டு மக்களிடையே தேசிய கீதத்தை சிங்களத்தில் இசைப்பதற்கு எதிரான உணர்வலைகள் பரவியிருந்தது.

தமிழ் பகுதிகளிலேயே தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாடவைத்து நாட்டுப் பற்றுப் பற்றியும் இன ஒற்றுமை பற்றியும் பிரதமர் யாழ்ப்பாணத்தில் பேசுவதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்திருந்தது மிகச் சரியானதாகும். யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய அனர்த்த தினம் தேசிய பாதுகாப்பு தினம் ஆகிய இரு வைபவங்களையும் இணைத்து நடாத்தப்பட்ட விழா குறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் தமிழ் மொழி புறக்கணிப்பு செய்யப்பட்ட காலங்களில் கூட தமிழில் இசைக்கப்பட்டு வந்த தேசிய கீதம் இப்போது தமிழுக்கு அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்ட பின்னர் தமிழ் பிரதேசங்களிலேயே சிங்களத்தில் இசைக்கப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவது குறித்து யாருக்கும் கேள்வி எழவே செய்யும். ஜனாதிபதி தான் கலந்து கொள்ளும் பிரதான நிகழ்வுகளில் தமிழிலும் ஓரிரு வார்த்தைகள் பேச வேண்டும் என்பதை பழக்கமாக கொண்டிருக்கின்ற காலகட்டத்தில், இதனை பலரும் விதந்து பாராட்டுகின்ற நிலையில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டு வந்த வழக்கத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்ற எண்ணம் பொருத்தமானதல்ல.

1958 ம் ஆண்டு வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள சிறீ எழுத்தை பயன்படுத்துவதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் கலவரத்தில் முடிந்ததோடு, பிற்காலத்தில் நாடு மோகசமான விளைவுகளை சந்திக்கக் காரணமாய் அமைந்தது. பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. உடமைகள் நாசமாக்கப்பட்டன. கால ஓட்டத்தில் இன்று எவ்வித ஆரவாரமுமில்லாமல் சிறி எழுத்து வாகன இலக்கத் தகடுகளிலிருந்து அகற்றப்பட்டுவிட்டது.

தேசியக் கொடியின் அம்சங்கள் தமிழர்கள் வைபவங்களின் போது தேசியக் கொடியை ஏற்றுவதை தவிர்த்துவிடுகின்ற நிலையை உருவாக்கியுள்ளது. தேசிய கீதத்தையும் அரை மனதோடு பாடிவந்த தமிழர்களை, தேசியகீதம் சிங்களத்திலேயே பாடப்பட வேண்டும் என்ற கட்டாயம் மேலும் விலகிச் செல்லவே வழிவகுக்கும்.

சிங்களத்திலேயே தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற யோசனை கொண்டுவரப்பட்டதற்கு காரணம் உலக நாடுகளில் ஒரு மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதனை மறுத்து கனடாவில் 3 மொழிகளிலும், சுவிற்சர்லாந்தில் 4 மொழிகளிலும் பாடப்படுகின்றது. தென்னாபிரிக்காவின் தேசிய கீதத்தில் 5 மொழிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று வாதிடப்படுகின்றது. உலகத்தில் உள்ள நாடுகளில் தேசிய கீதம் ஒரு மொழில் பாடப்படுவதாக இருப்பினும் கூட எங்களது நாட்டில் எரியும் பிரச்சினையாய் உள்ள இனப்பிரச்சினையின் வரலாறு. எங்களுடைய நாட்டு மககளிடையே ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்குத் தடையாக உள்ள காரணிகள் என்பவற்றை கவனத்திற் கொண்டு இந்த நாட்டின் வளர்ச்சியிலும், ஒருமைப்பாட்டிலும் அக்கறை கொண்டு இந்த நாட்டின் நீண்ட வரலாற்றுத் துயரமான இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படும் எவரும் தேசிய கீதம் ஒரே மொழியில் பாடப்பட வேண்டும் என்ற கோஷத்தை உயர்த்திப் பிடிக்க முடியாது. இதுகாலவரை தேசிய கீதத்தை தமிழிலும் பாடிவந்த வழக்கம் தொடர அனுமதிப்பது அல்லது அமைச்சர் அத்தாவுட செனிவிரத்தினா தெரிவித்திருப்பது போன்று தேசிய கீதத்தில் தமிழும் இடம்பெறச் செய்வது இனங்களிடையே நிலவும் நம்பிக்கையீனங்களைப் போக்கி புரிந்துணர்வை கட்டியெழுப்ப உதவும்.

வடக்கு கிழக்கின் நிர்வாக மொழியாக தமிழ் மொழியுள்ளதுடன் இலங்கையின் தேசிய மொழியில் ஒன்றாகவும் தமிழ் உள்ளது. எனவே வடகிழக்கில் தேசிய கீதம் தமிழ் மொழியிலேயே பாடப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதகுருமார்களே தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைக்கிறார்கள் பதவிக்கு வரும் எல்லா அரசாங்கங்களும் பௌத்த மத பீடங்களை திருப்திப்படுத்தவே தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை கையிலெடுக்கக் காரணம் என்ற அபிப்பிராயம் இப்போதும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

இந்த அபிப்பிராயங்களை பொய்யாக்கும் விதமாக தேசிய கீதம் பாடப்படும் விடயத்தை விவகாரமாக்கி இனக்களுக்கிடையே பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம் என மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரரான நியங்கொட விஜிதசிறி தேரர் பிரதமர் டி.எம்.ஜயரத்னாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய கீதத்தை தமிழில் பாடுவதில் சிரமங்கள் இருப்பின் தேசிய கீதத்தை இசையால் மட்டும் இசைக்க முடியும். தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கும் அரசியலமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது என மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரரை சந்தித்த பிரதமரிடம் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

உலக நாடுகள் மருத்துவத்திலும், தொழில்நுட்பத்திலும், விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துவதிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் சாதனைகளை நிகழ்த்திவரும் காலத்தில் நாங்கள் தேசிய கீதத்தை எந்த மொழியில் பாடுவது என்ற சர்ச்சையில் இறங்கியிருக்கிறோம். யுத்தம் முடிவடைந்து நாடு அபிவிருத்திப் பாதையில் பயணிக்கப் போகின்றது என்ற எதிர்பார்ப்புடனிருந்த ஒவ்வொருவருக்கும் இந்த சர்ச்சை ஒண்டும் சரிவராது என்ற அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

மக்களின் மன உணவர்வுகளுடன் தொடர்புடைய இந்தச் சர்ச்சைக்கு இனங்களிடையே நிலவும் நியாயமான சந்தேகங்களை தீர்த்து வைக்கும் விதமாக பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் ஆட்சியாளர்கள் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவது நாட்டுக்கு நல்லது.

இதன் மூலம் மக்களின் குரலுக்கு. மாறுபட்ட கருத்துக்களுக்கு மதிப்பளிக்கின்ற, இனப்பாகுபாடற்ற ஆட்சியாளர்களை கொண்ட ஜனநாயக நாடு என்ற ஆசியாவின் அதிசயமாக இலங்கை மிளிரட்டும்

## மார்ச்சில் உள்ளூராட்சி -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது என எதிர்க்கட்சிகளும் கணிசமான அளவு நடுநிலையானவர்களும் கணிப்பிடுகின்றனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோ தமது செல்வாக்கு சிறிதளவேனும் குறைந்து விடவில்லை என்று பகிரங்கத்தில் முழங்குகின்றார். அவர் தம் மனதுக்குள் என்ன கணிப்புகளைக் கொண்டிருந்தாலும் எதிர்வரும் தேர்தலில் தமது செல்வாக்கு சிறிதளவேனும் குறையவில்லை என்று நிறுவுவதற்கு எத்தனை வேண்டுமோ அத்தனையும் செய்வார் என்பது வெளிப்படையே.

மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமல்ல 1994 தொடக்கம் கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலாக மீண்டும் மீண்டும் தேர்தல்களில் தோல்விகளைச் சந்தித்தும் பிரிந்து பிரிந்து சின்னாபின்னமாகி உட்கட்சிச் சண்டையிலிருந்து மீளமுடியாமல் இருக்கின்ற ஐக்கிய தேசியக்கட்சி அதனது மாநாட்டை நடத்தி கட்சியின் அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி தமது கட்சியில் புதிய தலைமைகள் மேலெழுந்து வரக்கூடிய வகையில் புத்துணர்ச்சி கொடுத்திருப்பதாக அக்கட்சியினர் கூறுகின்றனர். கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது இருந்த நிலமையை விட மக்கள் மத்தியில் அவர்கள் கொஞ்சமாவது முன்னேறி இருக்கின்றனரா? என்பதையும் வரப்போகும் தேர்தல் கோடிட்டுக்காட்டவுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமைந்தாலும் மகிந்தவின் அதிகாரப்பலத்தையும் பாராளுமன்றத்தில் அவர் கொண்டுள்ள பெரும்பான்மை பலத்தையும் எதிர் வரும் 6 ஆண்டுகளுக்கு எவராலும் அசைத்து விட முடியாத நிலமையே இன்று காணப்படுகிறது.

உள்ளூராட்சிக்கான தேர்தல்கள் தொடர்பான தென்னிலங்கை நிலவரம் ஒருபுறம் இருக்க வடக்கு கிழக்கு இலங்கையின் தமிழ்க்கட்சிகளுக்கும் ஒரு சோதனையாகவே எதிர் வரும் தேர்தல் அமையப் போகிறது தமிழர்கள் மத்தியில் உள்ள அரசியல் கட்சிகளின் அணிகளை இன்றைய நிலையில் அவற்றை தேர்தலோடு தொடர்புபடுத்திப் பார்க்கையில் 3 வகை அணிகள் பிரதானமாக காணப்படுகின்றன.

1. தமிழ் தேசியக் கூட்டமைப்பு
2. டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி.
3. பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முண்ணனி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகியன இணைந்த ஒரு அணி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு தமிழர் தரப்பில் ஏக பிரதிநிதியாக இணைந்திருக்கும் நிலையே ஈ.பி.டி.பி. கொண்டிருக்கிறது. அந்த அணியில் வேறு எந்தவொரு தமிழக் கட்சியாவது இணைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதா என்பதுவும் அவற்றில் ஒருசில இணைவதற்கு தயாராக இருந்தாலும் அரசாங்கக் கட்சி இணைத்துக் கொள்ளுமா என்ற கேள்விகளுக்கும் விடைகள் எதிர்மறையாகவே உள்ளன. எனவே எதிர்வரும் தேர்தலில் வடக்கு கிழக்கில் அரசாங்கத்தில் அங்கமாக உள்ள கட்சிகள் மட்டுமே ஓர் அணியாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 18 தமிழ் உறுப்பினர்களில் 14 பேர் தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் ஆவார் அவ்வாறு பெரும்பான்மையைப் பெற்றிருந்தாலும் தமது கூட்டமைப்பை சேராத 4 பேர் கடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டமை அதிலும் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியைச் சேர்ந்த 3 பேர் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டமை கூட்டமைப்புக்கு கவலை ஏற்படுத்தும் விடயமாகும் மேலும் கடந்த 8 மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ள புனர்வாழ்வு, புனர்நிமாண நடவடிக்கைகள் தமது செல்வாக்கைக் குறைத்திருக்குமோ என்ற சந்தேகமும் அவர்களிடத்தில் இருக்கின்றது. பொதுவாக மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் ஏதும் பயன் ஏற்படுமா என்பதில் பலத்த சந்தேகங்களும் நம்பிக்கையீனங்களும் அதிகரித்திருப்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கக் கூடும். அரசாங்கம் தங்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்ற விசனமும் அவர்களுக்கு உண்டு. இந்த பின்னணிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை மேலும் அதற்கு வெளியாக உள்ள தமிழ் கட்சிகளோடு எதிர்வரும் தேர்தல் தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களைத் தெரிவிக்கின்றன. இருப்பினும் அதற்குள் நிலவும் உட்கட்சி இழுபறியால் அதன் நிலை பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைக்கு மாறிவிடாது என்றும் கூறுவதற்கில்லை!





மேலே மூன்றாவது அணியாகக் குறிப்பிடப்பட்ட கட்சிகளின் அணி அதாவது சிறிதரன், ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர்களைத் தலைவர்களாகக் கொண்ட கட்சிகள் ஓரணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து தேர்தலில் போட்டியிட விரும்புகின்றன என்பது தெரிகின்றது. அது நடப்பதற்கான சாத்தியங்கள் ஐம்பதுக்கு ஐம்பதே. தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த அணியினரையும் இணைத்துக் கொண்டு தேர்தலை எதிர்நோக்கத் தயாராக இல்லாவிடின் இந்த அணியினர் தமக்குள் ஒரு தேர்தற் கூட்டை வகுத்துக் கொண்டு செயற்படுவர் என்பதே இன்று வரை இருக்கும் நிலை. இந்தக் கட்சிகள் தமக்குள் ஒரு தேர்தற் கூட்டை ஏற்படுத்திக் கொள்ளாமல் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டு ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவார்கள் என்பது சந்தேகமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் உதயமும் வடக்கின் வசந்தமும்

பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகள் பயமின்றி சென்று வருகின்றனர் எல்லா இடங்களிலும் வைத்தியசாலைகள் இயங்குகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் எல்லா மதக் கோவில்களும் வெளிநாட்டுத் தமிழர்களின் பண உதவியால் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. இரவு படக்காட்சி காண்பிக்கப்படுகின்றது. யாழ் நகரப்பகுதியில் இரவு 10 மணி வரை கடைகள் திறந்திருக்கின்றன. வடமாகாணத்தின் சிறிய பொரிய நகரங்ளில் வியாபாரங்கள் அமோகமாக உள்ளன. தற்போது இங்குள்ள நகரம் ஒவ்வொன்றிலும் உள்நாட் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. அனைத்து அரசாங்க காரியாலயங்களும் புனரமைப்பு செய்யப்படுகின்றன. கடந்த வருடம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு சுமார் 30 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தென் இலங்கையிலிருந்து வந்து சென்றிருக்கின்றார்கள். மேற்கூறப்பட்ட எல்லாமும் மகிழ்ச்சிக்கும் நம்பிக்கைக்கம் உரிய விடயங்களே ஆனால் இதன் மறுபக்கங்களையும் பார்க்கும் போது வேதனையும் சந்தேகங்களும் ஏற்படுகின்றன.

2007ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சகல பகுதிகளிலிருந்தும் அரச படைகள் புலிகளை முற்றாக துரத்தியது. தோற்கடித்தது 2008ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து கிழக்கின் உதயம் என்ற பெயரில் யுத்தத்தால் அழிந்து கிடந்த கிழக்கு மாகாணத்தை மிக விரைவாக புனர் நிர்மானம் செய்து மக்களுக்கு புனர்வாழ்வளிப்பது என்ற அபிவிருத்தித் திட்டத்தை அரசு அறிவித்தது.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட கிழக்கு மக்கள் தத்தம் கிராமங்களுக்கு மீள் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கான குடியேற்ற நிவாரணம் மற்றும், புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சம்பூர் பிரதேசத்தை தவிர கிழக்கின் ஏனைய இடங்களில் எல்லாம் இடம் பெயர்ந்த மக்கள் தத்தம் இடங்களில் குடியேற அனுமதிக்கப்பட்டார்கள். கிழக்கின் கரையோர நெடுஞ்சாலை வீதி புனரமைக்கப்பட்டது. கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு நாளாந்தம் ரயில் ஓடும் நிலையும் உருவாக்கப்பட்டது. கல்விச் சாலைகள் திருத்தப்பட்டன. வைத்தியசாலைகள் திருத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டு அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி செயற்படும் நிலைமை ஆக்கப்பட்டது. கிழக்கின் உதயம் என்னும் மஹிந்த திட்டத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடந்துள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியவை தான். ஆனால் அதிருப்தி தரும் பல பக்கங்களையும் பார்க்க வேண்டியுள்ளது. மக்களால் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகரசபையால் மக்களுக்கு என்ன நன்மை விளைந்துள்ளது. என்றால் குறிப்பிடத்தக்க ஒன்றும் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது. மட்டக்களப்பில் மக்களின் குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதா? இல்லை. நகரம் குப்பை கூழங்கள் இல்லாமல் சுத்தமான நகரமாக இருக்கிறதா? அதுவும் இல்லை. மாநகரத்தில் சிதைந்து கிடக்கும் வீதிகள் திருத்தப்படுகின்றனவா? அப்படியும் இல்லை.

யுத்தத்தால் கிழக்கில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இப்போது மழை வெள்ளத்தால் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் பாதுகாப்பாக வீடுகளில் நிம்மதியாக வாழும் நிலையை அடைய இன்னும் எத்தனையோ வேண்டி இருக்கிறது.

கிழக்கு மாகாண மக்களின் விவசாயம், மீன்பிடி, கல்வி, சுகாதாரம், வீதிகளின் அபிவிருத்தி, கிராம மக்களிடையே நிலவும் வறுமையை ஒழித்தல், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல், போக்குவரத்து வீதிகளை மேம்படுத்தல் போன்றவற்றிற்க்காகத்தான் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இருக்கிறது. அது பெயருக்குத்தான் இருக்கிறது. தனக்கு எந்த அதிகாரமும் அளிக்கப்படவில்லை எனவும், தனது ஆட்சியிலுள்ள மாகாணசபையிடம் மாகாண அபிவிருத்திக்கான எந்த நிதிவளமும் இல்லை எனவும் கிழக்கின் முதலமைச்சர் அடிக்கடி பகிரங்கமாகவே கூறுகிறார். அப்படியானால் எதற்காக இந்த மாகாண சபைகளை கொழும்பு ஆட்சியாளர்கள் வைத்திருக்கிறார்கள். யாரைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு யானையைச் சங்கிலியால் அசைய முடியாமல் பிணைத்துக் கட்டிவைத்து விட்டு அந்த யானையால் எந்த வித பிரயோசனமும் இல்லை என்று கூறுவது முட்டாள்தனமல்லவா?

கிழக்கில் யுத்தம் முடிந்து இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன.கிழக்கு மக்களின் வாழ்வில் பொருளாதாரத்தில், சமூக செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் என்ன? அவர்கள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும், கௌரவமாகவும் வாழுவதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் என்ன? மக்களின் பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அடிப்படை அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரங்கள் எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கின்றன. என்ற கேள்விகளுக்கு கிழக்கின் உதயம் திருப்திகரமான பதில்களைத் தருகின்ற நாள் வருகின்ற பொழுதுதான் மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சி மக்களைப் பொறுத்த வரையில் அர்த்தமுடையதாகும்.

### வடக்கில் நிலவுவது குலுங்கும் வசந்தமா -மனம் கொதிக்கும் கோடையா?

2009 மே மாதம் வடக்கில் யுத்தம் முடிவடைந்தது. வன்னியில் அகதிகளான மூன்று இலட்சம் மக்களில் இரண்டே முக்கால் இலட்சம் பேர் தத்தமது இடங்களில் மீண்டும் குடியேறிவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் கடந்த இருபது வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக அகதிகள் ஆனோரில் சில நூறு குடும்பங்கள் மீண்டும் தத்தமது பூர்வீக இடங்களுக்குச் சென்று குடியேற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். கொழும்பிலிருந்தும் வட மாகாணத் தமிழர்கள் தத்தமது ஊர்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். மன்னாரிலிருந்து அகதிகளாக்கப்பட்ட முஸ்லீம்களில் பெருமளவானோர் தத்தமது பழைய கிராமங்களுக்குச் சென்று மீண்டும் குடியேறி விட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து விடப்பட்ட முஸ்லீம் மக்கள் இப்போது படிப்படியாகக் குடியேறிக்கொண்டிருக்கிறனர். ஏ-9 கொழும்பு - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை வீதி திறக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் பொருட்களின் விலைகளுக்கிடையே முன்னர் நிலவி வந்த வித்தியாசம் பெருமளவு குறைந்தது. யாழ்ப்பாணத்தில் பொருட்களின் தட்டுப்பாடு என்பது இல்லாமல் ஆனது வட மாகாண உற்பத்திப்பொருட்களை தென் பகுதிச் சந்தைகளுக்கு கொண்டு செல்லும் வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன.

> அரசின் ஆயுதப் படையணிகளுக்கோ பொலிசாருக்கோ மற்றும் அரசுக்கு துணையாக உள்ள கட்சியினர் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களுக்கோ அல்லது விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் புலிகளுக்கோ மக்கள் அஞ்சாது வாழும் சுதந்திரத்தை அரசு முழுமையாக உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகள் பயமின்றி சென்று வருகின்றனர் எல்லா இடங்களிலும் வைத்தியசாலைகள் இயங்குகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மோட்டார் வாகனப் பாவனைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. வடமாகாணமெங்கும் எல்லா மதக்கோவில்களும் வெளிநாட்டுத் தமிழர்களின் பண உதவிகளால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. வடமாகாணத்தின் பிரதான நகரப்பகுதியில் இரண்டாம் இரவுப் படக்காட்சிகள், இரவு 10 மணிக்கும் மேலாக கடைகள் திறக்கப்பட்டிருத்தல் என்பன சாதாரணமாகிவிட்டது. வடமாகாணத்தின் பெரிய சிறிய நகரங்களில் அனைத்திலும் வியாபாரங்கள் அமோகமாக உள்ளன. தற்பொழுது இங்கு நகரம் ஒவ்வொன்றிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. அனைத்து அரசாங்க காரியாலயங்களும் புனரமைக்கப்பட்டு செயற்படுகின்றன. யாழ்ப்பாணத்துக்கு சுமார் 30 லட்சம் சுற்றுலாப் பயணிகள் கடந்த வருடம் தெற்கிலிருந்து வந்து சென்றிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் 65 பயணிகள் பேருந்துகள் இரவுப் பயணம் செய்கின்றன. மேற்கூறப்பட்ட எல்லாமும் மகிழ்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் உரிய விடயங்களே. ஆனால் அதன் மறுபக்கங்களையும் பார்க்கும் போது வேதனையும் சந்தேகங்களும் வருகின்றன.

வடமாகாணத்தின் வீதிகள் பெரும்பாலும் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வீதிகள் மோசமான நிலையில் உள்ளன. கொழும்பிலிருந்து வவுனியா வரையான 250 மீற்றர் தூரத்தை நான்கரை மணித்தியாலத்தில் பயணிக்கும் ஒரு வாகனம் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையுமான 140 கிலோ மீற்றர் தூரத்தை கடப்பதற்கு ஐந்தரை மணித்தியாலம் ஆகின்றது. அந்தளவுக்கு மோசமான நிலையில் அந்த வீதி உள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் நகரங்களிலும் நகரங்களையொட்டிய பகுதிகளிலும் உள்ள வீதிகள் எதுவும் போக்குவரத்துக்கு தகுதியான வீதிகளாக இல்லை. குண்டுகளும் குழிகளும் நிறைந்த வீதிகளாகவே உள்ளன.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் குறிப்பாக யாழ்ப்பாண நகரத்தையொட்டிய பகுதிகளும் சகிக்க முடியாத அளவுக்கு நுளம்பு நிறைந்த பிரதேசங்களாக உள்ளன. மற்றும் நீரோடுவதற்கான கால்வாய்கள் எல்லாம் அழுக்குகள் குப்பைகள் தேங்கி அடைத்து நிற்கின்றன. யாழ்ப்பாண மாநகரத்தின் அநேகமான குளங்கள் அசுத்தங்களின் தொட்டிகளாகவே உள்ளன. சுத்தம் சுகாதாரம் என்பவற்றுக்கும் யாழ்ப்பாண மாநகரத்துக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை இருந்தும் பயன் என்ன? என்று யாழ்ப்பாண மக்கள் ஏங்கி நிற்கின்றனர். யுத்தம் முடிவுக்கு வந்து ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும் யாழ்ப்பாணத்துக்குள் இன்னும் 18000 குடும்பங்கள் அகதிமுகாம்களிலும் மேலும் 2000 குடும்பங்கள் அகதிமுகாம்களுக்கு வெளியே அகதிகளாகவும் அந்தர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்

வீதிகளை சீனா செப்பனிட்டுத் தரப்போகிறது. ரயில் பாதைகளை இந்தியா அமைத்துத்தரப் போகிறது. என்பவையெல்லாம் நடைமுறையில் இன்னும் பத்திரிகைச் செய்திகளாகவே உள்ளன. இருபது வருட யுத்த காலத்தில் புலிகளின் தலைமை வடமாகாணத்தின் அரச நிர்வாகங்களை சீரழித்துவிட்டனர். தாம் சொல்வதைத் தவிர வேறெதனையும் செய்யாமல் சாக்குப் போக்குகளைச் சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்தினர். மக்கள் பணத்தை புலிகளுக்கு சுருட்டிக் கொடுத்து தாமும் பங்கு போட்டுக் கொண்டவர்களும் உண்டு. இப்போதும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு தூக்கு தூக்கியும் ஜால்ராப் போட்டுக் கொண்டும் இருப்பவர்கள் மக்களுக்கான சேவைகளைச் செய்வதில் உண்மையான அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. மக்களை அலைக்கழிப்பதும் மக்களுக்கு தமது அதிகாரத்தைக் காட்டுவதிலும் இவர்கள் குறை விடுவதில்லை.

நிர்வாக அமைப்புக்களை ஊழல் அற்றதாக மக்கள் சேவைகள் மீது அக்கறை கொண்டதாக ஆக்குவதற்கான முயற்சிகள் எதனையும் வட மாகாண ஆளுனரோ, அமைச்சரோ இதுவரை மேற்கொண்டதற்கான எந்த அடையாளத்தையும் காணவில்லை. சில அதிகாரிகள் மக்களுக்கு நல்லதைச் செய்ய முனைந்தாலும் அதற்கு தடைகளே ஆயிரம் உள்ளன.

### பயக்கெடுதியும் அலைக்கழிப்பும

யாழ்ப்பாண மக்கள் மத்தியிலிருந்து இன்னும் புலிப்பயம் போகவில்லை. பிடிபட்டு விடுபட்ட புலிகள்தான் தனிப்பட்ட கொலைகள் கொள்ளைகளில் ஈடுபடுகிறார்கள் என்ற வதந்திகள் பரப்பப்பட்டிருக்கின்றன. அதற்கு மேலாக அரச படைகள் மற்றும் பொலிஸ் மீதான பயங்களும் அதிகரித்திருக்கின்றன. நடைபெற்றுவரும் கொள்ளைகள், கொலைகள், தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் நிலவுகின்றன. இந்தச் சந்தேகம் மக்கள் மத்தியில் பெரும் பயக் கெடுதியையே அதிகரித்திருக்கிறது. இந்த சந்தேகங்களையும் அரச படைகள் மீதான பயக் கெடுதியையும் போக்கும் நோக்கில் அரசாங்கம் ஆவன செய்வதாக அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

சமூகத் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு அரசாங்கம் இறுக்கல்பிடி போட்டிருப்பதனால் அந்நிறுவனங்களினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகள் கிடைக்க முடியாதபடி தடைப்பட்டுப் போயிருக்கின்றன. யுத்த காலங்களில் இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் யுத்தம் முடிவடைந்ததும் தத்தமக்கு வசதியான தமது பழைய இடங்களுக்கு மாற்றங்கள் கேட்டு அலைகின்றனர். அவர்களெல்லாம் அரச நிர்வாகத்தின் சிவப்பு நாடா முறைகளுக்குள்ளால் தமக்கான தேவைகளைப்பெற முடியாமல் தவிக்கிறார்கள். இவ்விடயத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ் அதிகாரிகளே கடும் போக்கைக் கடைப்பிடித்து அலைக்கழிப்பதாக குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகின்றன. இது உண்மையானால் தமிழ்த் தேசியம் மற்றும் தமிழர் சுய நிர்ணய உரிமையெல்லாம் இதற்குத்தானா என்ற கேள்வியல்லவா எழுகின்றது.

### உதயமும் வசந்தமும் உண்மையாக வேண்டுமானால்

- வடக்கில் வசந்தம் பூத்துக்குலுங்க வேண்டுமென்றால் கிழக்கில் உதயம் நிச்சயமாக வேண்டுமானால் ஏ 9 வீதி, ஏ 32 வீதி உட்பட அனைத்து நகரங்களையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் வீதிகள் அனைத்தும் மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். காங்கேசன்துறை தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதையும், மதவாச்சி தொடக்கம் மன்னார் வரையிலான ரயில் பாதையும் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் பூரணமாக புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.
- வடக்குக் கிழக்கின் விவசாய நிலங்கள் அனைத்தும் விவசாய உற்பத்திகளுக்கு பயன்படுத்தும் வகையாகவும் பயன்படுத்தப்படும் நிலத்தின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படும் வகையாகவும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
- வடக்கு கிழக்கு மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஊழல் அற்றவையாகவும் பொருள்வளங்கள் கொண்டவையாகவும் மக்களுக்கு முழுமையான சேவைகளை ஆற்றுவதற்கான வகைகள் செய்யப்பட வேண்டும்.
- வடக்கு கிழக்கு மாகாணத்தின் கரையோரங்கள் முழுவதும் மீன்பிடித் தொழில்கள் விரைந்து விருத்தியடைவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
- வடக்கு கிழக்கு மாகாணத்தில் அகதி என ஒருவரும் இல்லை என்னும் நிலை ஏற்பட வேண்டும். இடம் பெயர்ந்து மீண்டும் குடியேறியுள்ள மக்கள் அனைவரும் சுயமான பொருளாதார ஆற்றலைப் பெறும் வகையில் முறையான உதவிகள் அவர்களைச் சென்றடைய வேண்டும்.
- அரசின் ஆயுத படையணிகளுக்கோ ,பொலிஸாருக்கோ, மற்றும் அரசுக்கு துணையாக உள்ள கட்சியினர் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களுக்கோ அல்லது விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் புலிகளுக்கோ மக்கள் அஞ்சாது வாழும் சுதந்திரத்தை அரசு முழுமையாக உத்தரவாதம் செய்தல் வேண்டும்.
- இலங்கையில் அரசியல் யாப்புக்கு இணங்க சட்டத்தின் ஆட்சி, சுதந்திரமான நீதித்துறை, பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், அரசியற் சுதந்திரம், தொழிற்சங்க சுதந்திரம், கலை, கலாச்சார சுதந்திரம், வழிபாட்டு சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் போன்ற அடிப்படை மனித சுதந்திரங்களை அரசு வட கிழக்கில் முழுமையாக உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

வடக்கு கிழக்கின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அதிகாரங்கள் ஒரு சில மத்திய அமைச்சர்களிடத்திலும் ஒரு சில அரச அதிகாரிகளிடத்திலுமே குவிக்கப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் புனர்வாழ்வு நடவடிக்கைகளும், புனர்நிர்மாண வேலைத்திட்டங்களும் பரவலான அபிவிருத்தி நடவடிக்கைகளும் துரித கதியில் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் மாகாண அரசாங்கங்கள் வலுவான முறையில் செயற்படவும் உள்ளூராட்சி அரசாங்கங்கள் முறையாக மக்களுக்கு சேவையாற்றவும் கூடிய ஆற்றல்களைக் கொண்டிருக்க இலங்கை அரசு வழிவகை செய்ய வேண்டும்.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் [illegible] பிட்டிய, பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
Printed by : CRC Press, No. 119, University Road, Rattanapitiya, Boralesgamuwa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org